தினபூமி
thinaboomi.com
பூமி: 33 சுற்று: 196 வைகாசி 12
RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014
சென்னை, திங்கள், மே 26, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## ஒரே இரவில் 367 ட்ரோன்களை உக்ரைன் மீது ஏவியது ரஷ்யா! 13 பேர் உயிரிழப்பு-பலர் காயம்

...2-ம் பக்கம்

## தே.ஜ. கூட்டணி முதல்வர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை: 2 தீர்மானங்கள் நிறைவேற்றம்

...3-ம் பக்கம்

## குஜராத் அணியை வீழ்த்தி நடப்பு ஐ.பி.எல். தொடரை வெற்றியுடன் நிறைவு செய்த சி.எஸ்.கே. அணி

...6-ம் பக்கம்





● சென்னையில் தமிழ்நாடு அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிபு மறைவையொட்டி அவரது இல்லத்திற்கு நேற்று முதல்வர் மு.க. ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, டி.ஆர்.பாலு எம்.பி. மற்றும் துறைமுகம் காஜா ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாட்டின் நலன் கருதியே டெல்லி கூட்டத்தில் பங்கேற்பு:

# மாநிலத்தின் உரிமைகளை தி.மு.க. ஒருபோதும் விட்டுக்கொடுக்காது

### தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை, மே 26-

**தமிழ்நாட்டின் நலன் கருதியே பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்றதாக தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், நாட்டின் நலனை எப்படி தி.மு.க. விட்டுக்கொடுக்காதோ, அதுபோல மாநில உரிமைகளையும் ஒருபோதும் விட்டுக்கொடுக்காது என்று தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் அவர் உறுதிபட தெரிவித்துள்ளார்.**

**தொண்டர்களுக்கு கடிதம்**

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார். இதில் மாநில நலன் சார்ந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியிருந்தார். இந்த சூழலில் தி.மு.க. தொண்டர்களுக்கு கடிதம் ஒன்றை அவர் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது: நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கருணாநிதியின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல். பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மாநில முதல்வர்கள் பங்கேற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக தலைநகர் டெல்லிக்கு, தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் செல்கிறேன் என்ற செய்தி வெளியானதுமே, அரசியல் எதிரிகளின் அடிவயிற்றில் புளிகரைத்தது போன்ற உணர்வு ஏற்பட்டு, வழக்கம் போல வன்மத்தை வெளிப்படுத்தத் தொடங்கினார்கள்.

**கலந்து கொள்வது ஏன்?**

இத்தனை ஆண்டுகளாக நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இந்த முறை கலந்து கொள்வது ஏன்? என்றும், 'டாஸ்மாக் விவகாரத்தில் அமலாக்கத்துறை நடத்திய ரெய்டுகளில் கிடைத்துள்ள ஆவணங்களால் எதிர்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் பிரதமர் மோடியைச் சந்திக்க முதல்வர் செல்கிறார் என்றும், 'வெள்ளைக் கொடி ஏந்திச் செல்கிறார்' என்றும் கற்பனைச் சிறகுகளைப் பறக்க விட்டு, அலாதி இன்பம் கண்டனர் அரசியல் எதிரிகள்.

**மக்களின் பிரதிநிதியாக**

இந்தியாவின் எதிர்கால வளர்ச்சி குறித்து மாநில முதல்வர்களுடன் பிரதமர் ஆலோசிப்பதற்கான நிதி ஆயோக் கூட்டம் என்பதாலும், இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பங்கு மிக முக்கியமானதாகக் கடந்த 4 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் நிலைப்பெற்றிருப்பதாலும், தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதியாக, மாநிலத்தின் முதல்வராக நானும் அதில் பங்கேற்கத் தீர்மானித்தேன். அதற்கான அறிவிப்பும் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டு, ஊடகங்களில் வெளியானது.

**கூட்டணி அமைத்தவர்**

குடும்பச் சொந்தங்கள் மீதும் வியாபாரக் கூட்டாளிகள் மீதும் தமிழ்நாட்டிலும் கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களிலும் மத்திய அரசின் புலனாய்வு நிறுவனங்கள் ரெய்டு நடத்தியதும், சொந்தக் கட்சியினர் உள்பட யாருக்கும் தெரியாமல் அவசரமாக டெல்லிக்குப் பறந்து சென்று, அங்கு மீடியாக்கள் சூழ்ந்து கொண்டதும், கட்சி அலுவலகத்தைப் பார்க்கப் போகிறேன் என்று பம்மாத்து செய்து, நான்கு கார்கள் மாறி மாறி, உள்துறை அமைச்சர் அமித்ஷாவைப் பார்த்து, தன்னையும் தன்னை நம்பியுள்ள தொண்டர்களின் அடையாளமான கட்சியையும் ஒட்டுமொத்தமாக அடமானம் வைத்துக் கூட்டணி அமைத்தவர், என்னுடைய டெல்லிப் பயணம் குறித்து ஏதேதோ அளந்துவிட்டதை ரசித்தபடியே டெல்லிக்குப் புறப்பட்டேன்.

**தொடர்ந்து வலியுறுத்தி**

பிரதமர் மோடி தலைமையில் நடந்த கூட்டத்தில் பல மாநில முதலமைச்சர்களும் பங்கேற்ற நிலையில், அனைவரையும் அவர் வரவேற்றிட, முதல்வர்களும் பிரதமருடன் இயல்பாக அளவளாவினர். மாநிலங்களின் பங்களிப்பு இல்லாமல் இந்தியாவின் வளர்ச்சி இல்லை என்பதைத் தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், இந்தக் கூட்டம் அதற்கேற்ற வகையில் இருந்ததையும் உடன்பிறப்புகளான உங்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**4.5 டிரில்லியன் டாலராக**

2045-ம் ஆண்டில் 30 டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை நோக்கி இந்தியா பயணிக்க வேண்டும் எனத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அதில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 4.5 டிரில்லியன் டாலராக இருக்கும் என்பதைப் பிரதமரிடம் தெரிவித்தேன். அதாவது, தற்போது இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 10 சதவீதம் அளவிற்கு உள்ளது. அது 15 சதவீதம் அளவிற்கு அமையும் என்பதையும், அதற்கேற்ற மாநிலமாகத் தமிழ்நாட்டை திராவிட மாடல் அரசு முன்னெடுத்திருக்கிறது என்பதையும் இந்தியத் தலைநகரில் பெருமையுடனும் நம்பிக்கையுடனும் தெரிவிக்க முடிந்தது.

**சென்னையில் பேரணி**

தமிழ்நாடு எப்போதும் இந்தியாவின் வளர்ச்சிக்கான குருதியோட்டமாக இருப்பதை நாடு நன்கறியும். குறிப்பாக, தி.மு.க. ஆட்சி அமையும்போதெல்லாம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியுடன் இணைந்த அளவிலான மாநில வளர்ச்சியை முன்னெடுப்பது வழக்கமாக உள்ளது. இந்திய எல்லை மாநிலமான காஷ்மீரில் ஊடுருவி, அப்பாவிச் சுற்றுலாப் பயணிகளை ஈவிரக்கமின்றி கொன்ற தீவிரவாதிகளின் கொடுஞ்செயலுக்குச் சட்டமன்றத்தில் கண்டனம் தெரிவித்ததுடன், தீவிரவாத ஒழிப்பிற்காக இந்திய ராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவாக இருப்போம் என்பதை வெளிப்படுத்தும் வகையில் சென்னையில் முதலமைச்சரான உங்களில் ஒருவனான என் தலைமையில் பேரணியும் நடைபெற்றது.

**பங்களிப்பை சிறப்பாக**

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் முதல்வர்களே

(கடைசி பக்கம் பார்க்க)

## தமிழ்நாடு அரசின் தலைமை காஜி மறைவு: முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி

சென்னை, மே 26-

**தமிழக அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிப் உடலுக்கு முதல்வர் ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார்.**

நேற்று முன்தினம் இரவு சுமார் 9 மணி அளவில் வயது முப்பு காரணமாக, தமிழக அரசின் தலைமை காஜி சலாவுதீன் முஹம்மது அயூப் (84) மரணம் அடைந்தார். அவரது மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் உள்பட பல அரசியல் கட்சித் தலைவர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க டெல்லி சென்று சென்னை திரும்பிய முதல்வர் ஸ்டாலின், நேற்று தமிழக அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிபின் இல்லத்திற்கு நேரில் சென்று மறைந்த சாகிபின் உடலுக்கு அஞ்சலி செலுத்தியதுடன், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

அவருடன், அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் ஆகியோர் துக்க நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### 4 மாநிலங்களில் காலியாகவுள்ள

## 5 சட்டசபை தொகுதிகளுக்கு ஜூன் 19-ல் இடைத்தேர்தல்

### இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு

புதுடெல்லி, மே 26-

**கேரளா உள்ளிட்ட நான்கு மாநிலங்களில் காலியாக உள்ள 5 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு ஜூன் 19ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.**

குஜராத் மாநிலத்தின் 2 சட்டப்பேரவைத் தொகுதிகள், கேரளா, மேற்குவங்கம், பஞ்சாப் மாநிலங்களில் தலா ஒரு பேரவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடக்க இருக்கிறது. வாக்குகள் ஜூன் 23ம் தேதி எண்ணப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

குஜராத் மாநிலத்தில், காடி தொகுதியின் சட்டபேரவை உறுப்பினர், கார்சந்த்பாய் பஞ்சாபாய் சோலங்கி மரணமடைந்ததை தொடர்ந்து அத்தொகுதி காலியாக உள்ளது. மற்றொரு தொகுதியான விஸ்வதாரின் எம்.எல்.ஏ. பயானி பூபேந்திர கந்துபாய், தனது பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அத்தொகுதியும் காலியாக உள்ளது.

கேரளாவின் நிலாம்பூர் தொகுதியின் தற்போதைய எம்.எல்.ஏ. பி.வி. அன்வர் ராஜினாமா செய்ததாலும், பஞ்சாப் மாநிலத்தின் லூதியான தொகுதி எம்.எல்.ஏ. குர்பிரீத் பஸ்ஸி கோகி மற்றும் மேற்குவங்கத்தின் காளிகஞ்ச் எம்.எல்.ஏ. நசிருத்தீன் அஹமது ஆகியோர் உயிரிழந்ததாலும் மேற்சொன்ன மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளும் இடைத்தேர்தலைச் சந்திக்க இருக்கின்றன.

## தொழில்நுட்ப பணிகளுக்கான கலந்தாய்வு: மே 29, 30-ல் நடைபெறும் என அறிவிப்பு

சென்னை, மே 26-

**ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகளுக்கான தேர்வில் (நேர்முகத் தேர்வு இல்லாத பதவிகள்) குறிப்பிட்ட சில பதவிகளுக்கான 2-வது கட்ட அசல் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு, மே 29, 30 ஆகிய தேதிகளில் நடைபெறும் என டி.என்.பி.எஸ்.சி. அறிவித்துள்ளது.**

இது தொடர்பாக டி.என்.பி.எஸ்.சி. செயலாளர் எஸ்.கோபால சுந்தர ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஒருங்கிணைந்த தொழில் நுட்பப் பணிகளில் (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) அடங்கிய பதவிகளுக்கு எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டு அதில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் மற்றும் தரவரிசை பட்டியல், கடந்த பிப்ரவரி 20ம் தேதி தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

இத்தேர்வில் புள்ளியியல் ஆய்வாளர், கணினியர் மற்றும் தடுப்பூசி பண்டக காப்பாளர், உதவி நூலகர், நூலக உதவியாளர், உதவிப் பொறியாளர் (எலெக்ட்ரிக்கல்) ஆகிய பதவிகளுக்கான 2-வது கட்ட அசல் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு மே 29, 30-ம் தேதிகளில் நடைபெறும்.

அதேபோல், ஆராய்ச்சி உதவியாளர், வட்டார புள்ளியியலாளர், செயலக அலுவலர் (சட்டம்) மொழி பெயர்ப்பாளர் ஆகிய பதவிகளுக்கான 2-வது கட்ட அசல் சான்றிதழ் சரிபார்ப்பு மட்டும் மே 30ம் தேதி நடைபெறும். மேற்கண்ட அசல் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கு அழைக்கப் பட்டுள்ள தேர்வர்களின் பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டு இருக்கிறது.

இதற்கான அழைப்புக் கடிதத்தை இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். இது குறித்து சம்பந்தப்பட்ட தேர்வர்களுக்கு எஸ்.எம்.எஸ். மற்றும் மின்னஞ்சல் வாயிலாக தகவல் தெரிவிக்கப்படும். அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்பட மாட்டாது. அசல் சான்றிதழ் சரிபார்ப்புக்கு வர தவறினால் மறுவாய்ப்பு வழங்கப்படாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### பயங்கரவாதத்துக்கு எதிரான போரில்

## ஆபரேஷன் சிந்தூர் புதிய நம்பிக்கை, உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது

### பிரதமர் நரேந்திரமோடி பேச்சு

புதுடெல்லி, மே 26-

**சர்வதேச அளவில் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் ஆபரேஷன் சிந்தூர் புதிய நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளித்துள்ளது என்று தனது மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, பயங்கரவாதத்திற்கு எதிராக இந்தியா ஒன்றுபட்டு நிற்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

ஒவ்வொரு மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பிரதமர் மோடி, மனதின் குரல் என்ற வானொலி நிகழ்ச்சி மூலம் நாட்டுமக்களிடம் உரையாடி வருகிறார். அதன்படி, தனது 122 மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி நேற்று கூறியதாவது: ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது நமது படைவீரர்கள் வெளிப்படுத்திய துணிச்சல் ஒவ்வொரு இந்தியரையும் பெருமைப்பட வைத்துள்ளது. சர்வதேச அளவில் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில், ஆபரேஷன் சிந்தூர் புதிய நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளித்துள்ளது. ஆபரேஷன் சிந்தூர் நாட்டு மக்களை மிகவும் பாதித்துள்ளது, மேலும் அவர்களின் வாழ்வில் ஒரு அங்கமாக மாறியுள்ளது.

இன்று ஒட்டுமொத்த தேசமும் பயங்கரவாதத்துக்கு எதிராக திரண்டுள்ளது. தேசம் கோபாத்தில் நிறைந்துள்ளது, ஆனால் உறுதியாக உள்ளது. இன்று ஒவ்வொரு இந்தியரின் தீர்மானமும் பயங்கரவாதத்தை ஒழிப்பதேயாகும். எல்லை தாண்டிய பயங்கரவாதிகளின் மறைவிடங்களை நமது படைகள் துல்லியமாக தாக்கி அழித்தது அசாதாரணமானது. ஆபரேஷன் சிந்தூர் வெறும் ராணுவ நடவடிக்கை மட்டும் இல்லை. அது நமது உறுதிப்பாடு, தைரியம் மற்றும் இந்தியாவின் மாறிவரும் சித்திரம். இந்தச் சித்திரம், நாட்டை தேச பக்தியால் நிரப்பி, அதனை மூவர்ணக்கொடியின் வண்ணங்களால் வரைந்துள்ளது.

நாட்டின் பல நகரங்கள், கிராமங்கள் மற்றும் சிறுநகரங்களில் மூவர்ணக்கொடி யாத்திரை நடந்ததைப் பார்த்திருப்பீர்கள். ஆயிரக்கணக்கான மக்கள் மூவர்ணக்கொடியுடன் கூடி நமது படைவீரர்களுக்கு மரியாதை செலுத்தினர். பல நகரங்களில் இளைஞர்கள் சிவில் பாதுகாப்பு தன்னார்வளர்களாக இணைத்துக் கொண்டனர்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை நாட்டு மக்களை மிகவும் பாதித்துள்ளது. பல குடும்பங்கள் அதனை தங்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்றியுள்ளனர். பிஹாரின் கதிகாரில், உத்தரப் பிரதேசத்தின் குஷிநகர் மற்றும் பல நகரங்களில் அந்த காலக்கட்டத்தில் பிறந்த குழந்தைகளுக்கு சிந்தூர் என்று பெயர் வைத்துள்ளனர்.

நமது வீரர்கள் பயங்கரவாத தளங்களை அழித்தனர். அது அவர்களின் அசாத்திய துணிச்சலாலும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள், உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பங்களாலும் சாத்தியமானது. இந்தப் பிரச்சாரத்துக்கு பின்பு, உள்ளூர் மக்களுக்கான குரல் குறித்து நாடு முழுவதும் ஒரு புதிய ஆற்றல் வளர்ந்துள்ளது.

ஒரு பெற்றோர், தங்கள் குழந்தைகள் விளையாடுவதற்காக இந்திய தயாரிப்பு பொருள்களையே வாங்குவோம் என்று குறிப்பிட்டுள்ளனர். தேசபக்தி குழந்தைப் பருவத்தில் இருந்தே தொடங்குகிறது. பல இளைஞர்கள் இந்தியாவிலேயே திருமணம் என்று உறுதி எடுத்துள்ளனர். மேலும் சிலர் இனி தாங்கள் வழங்கும் எந்த ஒரு பரிசு பொருள்களும் இந்திய கைவினைஞர்களின் தயாரிப்பாகவே இருக்கும் என்றும் தெரிவித்துள்ளனர். இவ்வாறு பிரதமர் பேசினார்.

### தமிழகத்தில் நெல்லை, தேனி உள்ளிட்ட

## 4 மாவட்டங்களுக்கு இன்று ஆரஞ்ச் எச்சரிக்கை

சென்னை, மே 26-

**தமிழகத்தில் நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி, தேனி ஆகிய 4 மாவட்டங்களுக்கு இன்று மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் திருப்பூர், திண்டுக்கல்லில் ஒரிரு இடங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு வெளியிட்ட செய்திக்குறிப்பில், தமிழகத்தில் ஒருசில இடங்களில் கடந்த 24 மணி நேரத்தில் மழை பெய்துள்ளது. புதுவை

(கடைசி பக்கம் பார்க்க)

**மார்க்கெட் விலை நிலவரம்**



BSE 769.09 பாயின்ட் 81,721.08

NSE 243.45 பாயின்ட் 24,853.15




**தங்கம்** 1 சவரன் ₹71,920 1 கிராம் ₹8,990



**வெள்ளி** 1 கிலோ ₹111,000 1 கிராம் ₹111.00



**டாலர்** ₹85.17



**பெட்ரோல்** ₹102.63 டீசல் ₹94.24

# ஒரே இரவில் 367 ட்ரோன்களை உக்ரைன் மீது ஏவியது ரஷ்யா..!

## 13 பேர் உயிரிழப்பு - பலர் படுகாயம்

**கீவ், மே 26-**



ஒரே இரவில் 367 ட்ரோன்களை ஏவி உக்ரைன் முழுவதும் மிகப்பெரிய வான்வழி தாக்குதலை ரஷ்யா நடத்தியுள்ளது. தற்போது நடைபெற்று வரும் உக்ரைன் ரஷ்யா போரில் நடந்திருக்கும் மிகப்பெரிய வான்வழித்தாக்குதல் இதுவாகும்.

ரஷ்யாவின் வான்வழித் தாக்குதலில் 3 குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளனர், பலர் காயமடைந்துள்ளனர். கீவ், கார்கிவ், மைக்கோலைவ், டெர்னோபில் மற்றும் கிமெல்னிட்ஸ்கி என பரவலான அளவில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனிடையே உக்ரைன் விமானப்படை 267 ட்ரோன்கள் மற்றும் 45 ஏவுகணைகளை சுட்டுவீழ்த்தியதாக தெரிவித்துள்ளது. என்றாலும், உக்ரைனுக்கு பெரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. அடுக்குமாடி குடியிருப்புகள் உள்பட உள்கட்டமைப்புகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

கீவ்வில் 11 பேர் காயமடைந்துள்ளனர், கிமெல்னிட்ஸ்கி-ல் நான்கு பேர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. கிவ்-ஐ குறிவைத்து வெள்ளிக்கிழமை நடந்த ட்ரோன்கள், ஏவுகணைகள் தாக்குதல்களைத் தொடர்ந்து இந்த வான்வெளித்தாக்குதல் நடந்துள்ளது. தெற்கு உக்ரைனின் மைக்கோலைவ் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் 77 வயது முதியவர் ஒருவர் கொல்லப்பட்டார். ஐந்து பேர் காயமடைந்தனர் என்று பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலில் ஒரு அப்பார்ட்மெண்ட் தாக்கப்பட்டு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தலைமையின் கீழான அமெரிக்காவின் மவுனத்தை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி விமர்சித்துள்ளார். ரஷ்யாவுக்கு எதிராக வலுவான தடைகள் வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

# சீனாவில் பரவி வரும் கொரோனா வகைகள் இந்தியாவிலும் கண்டுபிடிப்பு

**புதுடெல்லி,மே 26-**

சீனாவில் வேகமாக பரவி வரும் கொரோனா திரிபு வைரஸ் இந்தியாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலகையே அச்சுறுத்திய கொரோனா தொற்று மீண்டும் பல நாடுகளை மிரட்டி வருகிறது. இதில் சீனா மற்றும் ஆசியாவின் சில பகுதிகளில் பாதிப்பு அதிகரிப்பதற்கு காரணமாக 2 வகை கொரோனா மாறுபாடு வைரஸ்களை உலக சுகாதார நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது.அந்தவகையில் என்பி.1.8.1 மற்றும் எல்எப்.7 ஆகிய 2 கொரோனா திரிபு வைரஸ்களால் இந்த பகுதிகளில் தொற்று வேகமாக பரவி வருவது தெரியவந்துள்ளது.

இந்த 2 வகை கொரோனாவும் இந்தியாவிலும் கண்டறியப்பட்டு இருக்கிறது. அதன்படி என்பி.1.8.1. வைரஸ் கடந்த மாதம் தமிழ்நாட்டில் ஒருவருக்கும், எல்எப்.7 வகை வைரஸ் குஜராத்தில் 4 பேருக்கும் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டு உள்ளது. இந்த மாறுபாடுகள் கண்காணிப்பின் கீழ்தான் இருப்பதாகவும், அவை அபாயமானவையாக இதுவரை வரையறுக்கப்படவில்லை என்பதும் உலக சுகாதார நிறுவனம் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது

**சேலம், மே 26-**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 2878 கன அடியாக குறைந்தது. காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை குறைந்துள்ளது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறையத் தொடங்கியது. நேற்று முன்தினம் (மே 24) காலை மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 5,725 கன அடி வீதம் நீர் வந்து கொண்டிருந்த நிலையில், நேற்று (மே 25) காலை வினாடிக்கு 2,878 கன அடியாக குறைந்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் காலை 111.51 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம், நேற்று காலை 111.60 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 80.70 டிஎம்சியாக உள்ளது.

# தமிழக அரசின் தலைமை காஜி மறைவு: அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல்

**சென்னை, மே 26-**

தமிழக அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிப் மறைவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு சுமார் 9 மணி அளவில் வயது முப்பு காரணமாக, தமிழக அரசின் தலைமை காஜி சலாவுதீன் முஹம்மது அயூப் (84) மரணம் அடைந்தார். அவரது மறைவுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, தமிழக அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிபின் மறைவுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது இரங்கல்களை தெரிவித்துள்ளனர்.

**அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி**

தலைமை காஜி சலாஹுத்தீன் அயூப் அவர்களின் மறைவு இஸ்லாமிய மக்களுக்கு மட்டுமின்றி ஒட்டு மொத்த தமிழ்நாட்டிற்கும் ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும். அவரது தொண்டினை நினைவுகூர்கின்ற இவ்வேளையில், அவரது ஆன்மா எல்லாம் வல்ல இறைவனின் நிழலில் இளைப்பாற வேண்டுகிறேன்.

**தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன்**

இஸ்லாமிய சட்ட திட்டங்களை (ஷரியா) செயல்படுத்துவதிலும், சமூகத்திற்கு வழிகாட்டுவதிலும் கடமை உணர்வோடு, பொறுப்பாக,



சிறப்பாக செயல்பட்டவர். படித்து பட்டம் பெற்ற பெருமை மிக்க அறிஞர். சமூகத்தில் நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை வளர்க்க பாடுபட்டவர். இஸ்லாமியர்களுக்கு நல் வழி காட்டுவதற்கு அக்கறையோடு பணியாற்றியவர். இஸ்லாமிய சமூகத்தின் முன்னேற்றத்திற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து கொண்டு வாழ்ந்தவர். இரக்க குணம் மிக்க இவர் அனைவராலும் போற்றப்பட்டவர்.

**பா.ம.க. தலைவர் அன்புமணி**

அரபு மொழி மற்றும் இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியரான அவர், உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியத் தலைவர்களுடன் நல்லுறவு கொண்டிருந்தார். தமிழகத்திலுள்ள இஸ்லாமிய மக்களுக்கு கல்வி, கலாச்சாரம் குறித்து வழிகாட்டினார். அனைவர் மீதும் அன்பு செலுத்திய அவர், மத நல்லிணக்கத்திற்காகவும் பாடுபட்டார். .

**முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்**

அரபு மொழி மற்றும் இலக்கியத்தில் நிபுணத்துவம் பெற்றவரும், தமிழக அரசின் தலைமை காஜியுமான சலாவுதீன் முகமது அய்யூப் சாகிப் அவர்கள் வயது மூப்பின் காரணமாக காலமானார் என்ற செய்தியறிந்து ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மனவேதனையும் அடைந்தேன். தலைமை ஹாஜி அவர்களின் பிரிவால் வருந்தும் இஸ்லாமியப் பெருமக்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்**

சுமார் 40 வருடங்களாக தமிழக அரசு தலைமை காஜியாக கவுரவ பொறுப்பு வகித்தவர், எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர் என்பதும் நினைவு கூறத்தக்கது. அவரை இழந்து வாடும் இஸ்லாமிய சொந்தங்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் சார்பில், தமிழக அரசின் தலைமை காஜி சலாஹுத்தீன் முஹம்மத் அய்யூப் சாஹிப் உடலுக்கு, அமமுக துணைப் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செந்தமிழன் மற்றும் கட்சி நிர்வாகிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

## அரசுக்காக வேலை செய்யவில்லை:

# வெளிநாடு பயணம் குறித்து சசி தரூர் எம்.பி. விளக்கம்

**புதுடெல்லி, மே 26-**

''நான் அரசாங்கத்திற்காக வேலை செய்யவில்லை' என பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவு செயல்பாடுகளை வெளிநாடுகளுக்கு விவரிக்கும் பயணம் குறித்து காங்கிரஸ் எம்.பி., சசி தரூர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவு செயல்பாடுகளை, பல்வேறு நாடுகளுக்கும் நேரில் சென்று விரிவாக விவரிப்பதற்காக, அனைத்து கட்சி எம்.பி.,க்கள் அடங்கிய ஏழு குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது. அதில் ஒரு குழுவிற்கு காங்கிரஸ் எம்.பி., சசி தரூர் தலைமை வகிக்கிறார். அமெரிக்காவிற்கு காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் தனது குழுவுடன் சென்றுள்ளார்.

நியூயார்க்கில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில், சசி தரூர் பேசியதாவது: நான் அரசாங்கத்திற்காக வேலை செய்யவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். நான் ஒரு எதிர்க்கட்சிக்காக வேலை செய்கிறேன். புத்திசாலித்தனமாகத் தாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கூறி, ஒரு கட்டுரையை எழுதியுள்ளேன்.

இந்தியா அதைத்தான் செய்தது என்று சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். பஹல்காம் பயங்கரவாத தாக்குதலின் பின்னணியில் மக்களைப் பிரிப்பதே நோக்கமாக இருந்தாலும், அது இந்தியாவில் மதம் அல்லது வேறு எந்தப் பிரிவினையையும் பொருட்படுத்தாமல் மக்களை ஒன்றிணைத்தது.

ஒரு தீய நோக்கம் இருந்தது என்பது மிகவும் தெளிவாகிறது. துரதிர்ஷ்டவசமாக, அது எங்கிருந்து வந்தது என்பதில் இந்தியா சந்தேகிக்க எந்த காரணமும் இல்லை. பயங்கரவாதத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளப் போவதில்லை, அதற்குப் பதில் சொல்லும். மாறாக ஒரு பழிவாங்கும் நடவடிக்கை மட்டுமே, அந்தச் செயலை நிறுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

# உதகையில் சுற்றுலா தலங்கள் இன்று மூடல்

**உதகை, மே 26-**

உதகையில் அனைத்து சுற்றுலா தலங்களும் இன்று (மே 26) மூடப்படும் என மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கு இன்று ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு பேரிடர் மீட்பு படையினர் தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், நீலகிரிக்கு இன்றும் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்குள்ள சுற்றுலா தளங்கள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உதகை அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, படகு இல்லங்கள் உட்பட அனைத்து சுற்றுலா தலங்களும் இன்று (மே 26) மூடப்படும் என மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

# தமிழக தலைமை காஜி மறைவுக்கு த.வெ.க. தலைவர் விஜய் இரங்கல்

**சென்னை, மே 26-**

தலைமை காஜி மறைவுக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் தலைமை காஜி சலாகுத்தீன் முஹம்மது அயூப் (84) நேற்று முன்தினம் காலமானார். அவரது மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை, தமிழ் மாநில தேசிய லீக் கட்சி சம்ஜூதீன் உள்பட அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தலைமை காஜி மறைவுக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விஜய் தனது எக்ஸ் தள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:- தமிழ்நாடு அரசு தலைமை காஜி அல்லாமா முப்தி முஹம்மது ஸலாஹுத்தீன் அய்யூபி காதிரி அஜ்ஹரி அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தேன். தனது தலைமை காஜி பொறுப்பில் நேர்மையோடு அறத்தின் வழியில் பணியாற்றியவர். அரசு வழங்கிய சைரன் வைத்த கார், அரசு ஒதுக்கிய வீடு, அரசு வழங்கிய தலைமை அலுவலகம் எனத் தனது பொறுப்புக்காக அரசு வழங்கிய சலுகைகளைப் பெறாமல் சேவை யாற்றியவர்.

அனைவரின் நன்மதிப்பைப் பெற்ற தலைமை காஜி அல்லாமா முப்தி முஹம்மது ஸலாஹுத்தீன் அய்யூபி காதிரி அஜ்ஹரி அவர்களைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் இஸ்லாமியப் பெருமக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பிரிட்டிஷ் குடியுரிமை பெற அமெரிக்கர்கள் திடீர் ஆர்வம்

**லண்டன், மே 26-**

பிரிட்டனில் குடியுரிமை பெறுவதில் அமெரிக்கர் அதிகளவில் ஆர்வம் காட்டுவதாக பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.

பிரிட்டனில், இந்தாண்டின் முதல் மூன்று மாதங்களில் இதுவரையில் இல்லாத வகையில், அதிகளவிலான அமெரிக்கர்கள் குடியுரிமை பெற விருப்பம் தெரிவித்ததாக பிரிட்டன் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த மார்ச் மாதம்வரையில் மட்டும் 6,618 அமெரிக்கர்கள், பிரிட்டன் குடியுரிமைக்கு விண்ணப்பித்தனர். இது, பதிவுகள் தொடங்கப்பட்ட 2004 ஆம் ஆண்டில் இருந்து அதிகளவிலான வருடாந்திர எண்ணிக்கை என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.


மேலும், ஜனவரி முதல் மார்ச் வரையிலான 3 மாதங்களுக்கு இடையில் மட்டும் 1,900-க்கும் மேற்பட்ட கோரிக்கைகள் பெறப்பட்டதாக பிரிட்டன் அரசு தெரிவித்தது. இதுவும், எந்தவொரு காலாண்டிலும் பெறாத அதிக எண்ணிக்கையே.

அமெரிக்காவில் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றதிலிருந்து, பிரிட்டன் செல்வதற்கான சாத்தியக் கூறுகளையும் ஆலோசனைகளையும், இதுவரையில் இல்லாத அளவில், அதிகமானோர் பெற்றதாக குடிவரவு வழக்குரைஞர்கள் தெரிவித்தனர்.

பிரிட்டனில் மனைவி, பெற்றோர், குடும்பத்தினரைக் காரணமாகக் கொண்டுதான் பெரும்பாலானோர் குடியேறிய விரும்பியதாகவும், தொழிலாளர்களுக்கான தற்காலிக விசாக்களுடன் பிரிட்டனில் குடியேற சிலர் விரும்பியதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்தது.

இருப்பினும், டிரம்ப்பின் ஆட்சியால்தான் அமெரிக்காவில் இருந்து பிரிட்டனுக்கு குடியேற முயல்வதாக சமூக ஊடகங்களில் இணையவாசிகள் கருத்துகளை பகிர்ந்து வருகின்றனர்.

**26-05-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** இன்று வீட்டில் பெரியவர்கள் பாசத்துடன் அரவணைத்து செல்வர். நல்ல வாகன யோகம் ஏற்படும். வாக்கு வன்மையால் வியாபார விருத்தி ஏற்படும். புத்தாடை அணிகலன்கள் சேரும்.

**ரிஷபம்:-** இன்று வெளியாட்களின் தலையீட்டால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு, பின் குடும்பத்தில் நிம்மதி நிலவும். விரயச் செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.

**மிதுனம்:-** இன்று தனலாபமும், அனைத்து வகை நன்மைகளும் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**கடகம்:-** இன்று அரசு ஆதரவு மற்றும் பெரியோர்களால் உதவி பெற்று மகிழ்வீர்கள். அதிகார பதவிகள் கிடைக்க வாய்ப்புள்ளது. வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். திருமணப் பேச்சுக்கள் எழலாம். .

**சிம்மம்:-** இன்று கோவில், குளம் பணி மற்றும் தெய்வீக காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்ல குழந்தை பிறக்கும். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். சிலருக்கு புத்திர பாக்கியத்திற்கு வழி பிறக்கும்.

**கன்னி:-** இன்று அனுகூலமற்ற நாள். வழக்கு, வியாஜ்ஜியங்கள் வெற்றி காண இயலாது. எனவே, தள்ளிப் போடுவது நல்லது. நியாயமான செயல்களில் மட்டும் ஈடுபடுவது நல்லது.

**துலாம்:-** இன்று புத்தாடைகள் கிடைக்கும். மனைவி மூலம் நன்மைகள் பல உண்டாகும். பல வழிகளில் தனவரவு உண்டாகும். தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்படும். வாகன சுகம் உண்டு.

**விருச்சிகம்:-** இன்று புதுப் பெண்ணின் சிநேகம் ஏற்படுவதால் மனதில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு சொந்த வீடு வாங்கும் யோகம் ஏற்படும். நண்பர்கள் உதவிக்கரம் நீட்டுவர். .

**தனுசு:-** இன்று குழந்தைகளின் உடல் நிலையில் மிகுந்த அக்கறை தேவை. அரசால் ஆதாயம் கிடைக்க அதிக பிரயாசைப் பட வேண்டியிருக்கும். நண்பர்களே பகையாக கூடும்.

**மகரம்:-** இன்று வீட்டில் திருடு போகாத வண்ணம் இருக்க, மதிப்பு உயர்ந்த பொருட்களை பாதுகாப்பது நல்லது. எந்தக் காரியங்கள் செய்யும் முன்பும் யோசித்து செய்யுங்கள்.

**கும்பம்:-** இன்று உங்கள் மனதில் தெம்பும் மகிழ்ச்சியும் ஏற்படும். ஆடை ஆபரணங்கள் சேரும். மனைவியும் மறுக்காமல் அதிகம் ஒத்துழைப்பால். தன்னம்பிக்கை கூடும்.

**மீனம்:-** இன்று தன லாபம் அதிகரிக்கும். என்று சொல்வதற்கில்லை. மாணவர்களின் கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. உடல் நிலையில் அக்கறை கொள்ளுங்கள்.

# வெள்ளியங்கிரி மலை ஏறிய இரண்டு பக்தர்கள் உயிரிழப்பு

**கோவை, மே 26-**

வெள்ளியங்கிரி மலை ஏறிய இரண்டு பக்தர்கள் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கோவை, நீலகிரி மாவட்டங்களில் இன்று அதிதீவிரமாக கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை மையம் ரெட் அலர்ட் விடுத்து உள்ளது. அந்த வகையில் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த 3 நாட்களாக மழை பெய்து வருகிறது.

மேற்குதொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் பலத்த மழை கொட்டுகிறது. இந்த சூழலில் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளதால் வெள்ளியங்கிரி மலையில் ஏற பக்தர்களுக்குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டது. இதன்படி மறு அறிவிப்பு வரும் வரை வெள்ளியங்கிரி மலையேற பக்தர்களுக்கு வனத்துறை தடை விதித்தது. மலைப் பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால் பக்தர்களின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். மேலும், பரளிக்காடு, பூச்சமரத்தூர் சூழல் சுற்றுலா தலங்களுக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வெள்ளியங்கிரி மலை ஏறிய இரண்டு பக்தர்கள் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதன்படி 7வது மலையில் பெண் பக்தர் ஒருவரும், 5வது மலையில் ஒருவரும் உயிரிழந்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணையில் உயிரிழந்த பெண் காரைக்காலை சேர்ந்த கவுசல்யா மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த செந்தில்குமார் ஆகியோர் என்பதும் தெரியவந்தது. நடப்பாண்டில் மட்டும் வெள்ளியங்கிரி மலை ஏறி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7ஆக உயர்ந்துள்ளது.

# டெல்லியில் கனமழை, வெள்ளம்; விமான சேவை கடுமையாக பாதிப்பு

**புதுடெல்லி, மே 26-**

டெல்லியில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ததால் நகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் ஏற்பட்டபோதும் கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு உள்ளது.

சுரங்க பாதைகளில் தேங்கிய மழைநீரில் கார், பஸ் உள்ளிட்ட வாகனங்கள் மூழ்கியுள்ளன. அதுபற்றிய புகைப்படங்களும் வெளிவந்து அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது. வாகனங்கள் மழைநீரில் மிதந்தபடி செல்கின்றன. மரங்கள் வேருடன் சாய்ந்து விழுந்தன. சாணக்யபுரி, ஐ.டி.ஓ., சுப்ரதோ பூங்கா, நாணக்புரா மற்றும் தவுலாகான் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.

அக்பர் சாலையில் பலத்த காற்று மற்றும் கனமழையால் மரங்கள் வேருடன் சாய்ந்தன. இந்த திடீர் பருவ மாறுதலால் விமான போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்பட்டது. 49 விமானங்கள் நேற்றிரவு 11.30 மணி முதல் அதிகாலை 4 மணி வரை வேறு பகுதிகளுக்கு திருப்பி விடப்பட்டன. இதனை முன்னிட்டு, டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், தன்னுடைய பயணிகளுக்கு பயண அறிவுறுத்தல் ஒன்றை வழங்கியுள்ளது. விமான சேவையை பற்றி அவ்வப்போது உறுதிப்படுத்தி கொள்ளும்படி கேட்டு கொள்ளப்பட்டு உள்ளது.

டெல்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ரெட் அர்ட் விடப்பட்டு உள்ளது. இடி, மின்னலுடன் கூடிய மழை மற்றும் பலத்த காற்று வீச கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது. மக்கள் நீர் நிலைகளை தவிர்க்கும் படியும், மரங்களின் கீழ் தஞ்சம் புகாமல் இருக்க வேண்டும் என்றும் திறந்த வெளி பகுதிகளை தவிர்க்கும்படியும் எச்சரிக்கப்பட்டு உள்ளது.

# பாகிஸ்தானில் பத்திரிகையாளர் சுட்டுக்கொலை

**இஸ்லாமாபாத், மே 26-**

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் சனிக்கிழமை அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் பத்திரிகையாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் குவெட்டாவை தளமாகக் கொண்ட செய்தித்தாள் ஒன்றில் பணிபுரிந்து வந்தவர் பத்திரிகையாளர் அப்துல் லத்தீப் பலூச். சனிக்கிழமை இவரது வீட்டில் நுழைந்த மர்மநபர்கள் அவரைக் கடத்த முயன்றுள்ளனர். ஆனால் அதை எதிர்த்து போராடிய அவரை துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானதாக மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பின்னர் மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

கொலை குறித்து விசாரணை நடந்து வருவதாக போலீஸார் தெரிவித்தனர். சில மாதங்களுக்கு முன்பு பலூச்சின் மூத்த மகனும் கடத்தப்பட்டு பின்னர் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டார்.

பத்திரிகையாளர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பாகிஸ்தான் கூட்டாட்சி பத்திரிகையாளர் சங்கம் உள்ளிட்ட பத்திரிகையாளர் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

# தே.ஜ. கூட்டணி முதலமைச்சர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை

## இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றம்



**புதுடெல்லி, மே 26-**

தேசிய ஜனநாயக கூட்டணி முதல்வர்களுடன் பிரதமர் மோடி நேற்று ஆலோசனை நடத்தினார்.

10-வது நிதி ஆயோக் கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் டெல்லி பாரத் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி உள்பட பல்வேறு மாநில முதல்வர்கள் கலந்து கொண்டனர். மேற்கு வங்காளம், கேரளா, பீகார் உள்பட 5 மாநில முதல்வர்கள் கலந்து கொள்ளவில்லை.

இதை தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணி முதல்வர்களுடன் பிரதமர் மோடி நேற்று ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணி கட்சியை சேர்ந்த 20 மாநில முதல்வர்கள் மற்றும் 18 துணை முதல்வர்கள் கலந்து கொண்டனர். பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி. நட்டா மத்திய மந்திரிகள் அமித்ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்டோரும் இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர்.

முதல்வர்களான யோகி ஆதித்யநாத் (உத்தர பிரதேசம்), நிதிஷ் குமார் (பீகார்), தேவேந்திர பட்னாவிஸ் (மகாராஷ்டிரா), மற்றும் துணை முதல்வர்களான ஏக்நாத் ஷிண்டே, அஜீத் பவார், பவன் கல்யாண் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் 2 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவம் நடத்திய ஆபரேஷன் சிந்தூரின் வெற்றிக்காக இந்திய பாதுகாப்பு படைகள் மற்றும் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்து இந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த மத்திய அரசு எடுத்த முடிவுக்கும் பாராட்டு தெரிவித்து மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### அலைமோதும் கூட்டம்:

# திருப்பதியில் 24 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் தரிசனம்

**திருப்பதி, மே 26-**

திருப்பதியில் இலவச தரிசன பக்தர்கள் 24 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. பள்ளி கல்லூரிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டு உள்ளதால் வார இறுதி விடுமுறை நாட்களில் கட்டுக்கடங்காத அளவு பக்தர்கள் தரிசனத்திற்கு வருகின்றனர்.

திருமலையில் வைகுண்டம் கியூ காம்ப்ளக்சில் உள்ள 31 கம்பார்ட்மெண்டுகளில் பக்தர்கள் நிரம்பி, சிலாத்தோரணம் வரை பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். தேதி, நேரம் குறிப்பிடப்பட்ட (டைம் ஸ்லாட்) டோக்கன்கள் இல்லாத இலவச தரிசன பக்தர்கள் 24 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

திருப்பதியில் நேற்று முன்தினம் 92,216 பேர் தரிசனம் செய்தனர். 43,346 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.3.11 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 30 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

# முதல்வர் டெல்லி சென்றது ஏன்? த.வெ.க. தலைவர் விஜய் கேள்வி

**சென்னை, மே 26-**

முதல்வர் டெல்லி சென்றது ஏன் என்று த.வெ.க தலைவர் நடிகர் விஜய் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது., டாஸ்மாக் ஊழல் விவகாரத்தில், கடந்த மார்ச் மாதம் அமலாக்கத் துறை நடத்திய ரெய்டைத் தொடர்ந்து, சமீபத்தில் டாஸ்மாக் மேலாண் இயக்குநர் தொடர்பான இடங்களில் ரெய்டு நடத்தப்பட்டது. இதற்கிடையே, டாஸ்மாக் மீதான அமலாக்கத் துறை விசாரணைக்குத் தடை கேட்டு சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மேல்முறையீடு செய்து இடைக்காலத் தடையையும் வாங்கியது.

எனினும், இது நிரந்தரத் தடையல்ல என்பதால் எங்கே பேசினால் விசாரணை தடுத்து நிறுத்தப்படுமோ, அங்கே பேசியாக வேண்டிய சூழ்நிலைக்கு, தி.மு.க. அரசின் முதல்வர் ஸ்டாலின் தள்ளப்பட்டார். அதற்கேற்றாற்போல அமைந்ததுதான் நிதி ஆயோக் கூட்டம். சென்ற ஆண்டு இதே நிதி ஆயோக் கூட்டம் டெல்லியில் நடந்தபோது அக்கூட்டத்துக்குச் செல்லாமல், தான் செல்லாததற்கான காரணங்களை அடுக்கி முதல்வர் ஸ்டாலின் ஒரு வீடியோ வெளியிட்டார். அப்போது சொன்ன காரணங்கள். இப்போதும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. அப்படியிருக்க. இம்முறை மட்டும் ஏன் செல்ல வேண்டும்? எல்லாவற்றுக்கும் காரணம். அமலாக்கத்துறை படுத்தும் பாடுதான். இவ்வாறு அறிக்கையில் விஜய் தெரிவித்துள்ளார்.

### தானேவில் திடீர் பரபரப்பு:

# கொரோனாவுக்கு இளைஞர் பலி

**மும்பை, மே 26-**

தானேவில் 21 வயது இளைஞர் கொரோனாவுக்கு பலியாகியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிர மாநிலம், மும்ப்ராவைச் சேர்ந்த 21 வயது நபர் மே 22ஆம் தேதி தானேயில் உள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜ் கால்வா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்ட நிலையில் சிகிச்சைப் பலனின்றி அந்த இளைஞர் பலியானதாக தானே நகராட்சி தெரிவித்துள்ளது. இதனிடையே கர்நாடகத்தில் 84 வயது முதியவர் ஒருவர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளதாக தகவல் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் பல மாநிலங்களில் முக்கியமாக கேரளம், தமிழ்நாடு, மகாராஷ்டிரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் பதிவான கொரோனா பாதிப்புகள் தொடர்பான விஷயத்தை மத்திய சுகாதாரத் துறை மதிப்பாய்வு செய்ததாக அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் சனிக்கிழமை தெரிவித்தன. இந்த பாதிப்புகளில் பெரும்பாலானவை லேசானவை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டிலேயே கண்காணிப்பில் உள்ளனர். இருப்பினும், மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் விழிப்புடன் உள்ளதோடு நிலைமையை உன்னிப்பாகவும் கண்காணித்து வருவதாக அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# என்.ஓ.சி. நடைமுறை விவகாரம்: வங்கிகளுக்கு ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, மே 26-**

'வாங்கிய கடனை முழுமையாக திருப்பி செலுத்திய பிறகும், வேறொருவர் வாங்கிய கடனுக்கு ஜாமீன் உத்தரவாதம் அளித்திருந்தால் நிலுவை இல்லை என்பதற்கான சான்று (என்.ஓ.சி) அளிக்க மறுக்கக்கூடாது' என வங்கி நிர்வாகங்களுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாலாஜி என்பவர் தனியார் வங்கி ஒன்றில் தனது டேங்கர் லாரிக்காக கடன் பெற்றிருந்தார். வாங்கிய கடன் தொகையை வட்டியும், முதலுமாக முறையாக திருப்பி செலுத்தியிருந்தும் அதற்கான நிலுவை இல்லை என்பதற்கான சான்று (என்.ஓ.சி) வழங்கும்படி வங்கி நிர்வாகத்திடம் கோரினார். ஆனால் அதே வங்கியில் லீலாவதி என்பவர் வாகனத்துக்காக வாங்கிய கடன் தொகைக்கு பாலாஜி, ஜாமீன் உத்தரவாதம் அளித்துள்ளதைக் காரணம் காட்டி, அவருக்கு என்.ஓ.சி. வழங்க முடியாது என வங்கி நிர்வாகம் மறுப்பு தெரிவித்தது.

இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் பாலாஜி வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: மனுதாரர் தனது வாகனத்துக்காக வாங்கிய கடனை வட்டியும், முதலுமாக முழுமையாக திருப்பி செலுத்திய பிறகும், வேறொருவர் வாங்கிய கடனுக்கு அவர் ஜாமீன் உத்தரவாதம் அளித்திருந்தார் என்பதற்காக அவருக்கு நிலுவையில்லா சான்று (என்.ஓ.சி) அளிக்க முடியாது என வங்கி நிர்வாகம் மறுப்பது ஏற்புடையதல்ல.

பொதுவாக ஒருவர் வாங்கும் கடனுக்கு மற்றொருவர் ஜாமீன் உத்தரவாதம் அளித்தார் என்றால், கடன் பெற்ற நபர் தவணையை முறையாக திருப்பி செலுத்த தவறும்பட்சத்தில் தான் உத்தரவாதம் அளித்தவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதே நேரம் உத்தரவாதம் அளித்த நபர், தான் பெற்ற கடன் தொகையை முழுமையாக அடைத்துவிட்டால், அந்தக் கடனுக்குரிய நிலுவை இல்லை என்பதற்கான சான்றிதழை வழங்க முடியாது என வங்கி நிர்வாகங்கள் சட்ட ரீதியாக மறுக்க முடியாது. இவ்வாறு உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

### கட்சியிலிருந்து மூத்த மகன்

# தேஜ் பிரதாபை நீக்கிய லல்லு பிரசாத் யாதவ்

**பாட்னா, மே 26-**

பொறுப்பற்ற நடத்தை காரணமாக தனது மூத்த மகனான தேஜ் பிரதாபை கட்சியிலிருந்து 6 ஆண்டுகளுக்கு நீக்குவதாக ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சியின் தலைவரும், பீஹார் முன்னாள் முதல்வருமான லல்லு அறிவித்துள்ளார்.

லல்லுவின் மூத்த மகனும், பீஹார் முன்னாள் அமைச்சருமான தேஜ் பிரதாப், நேற்று முன்தினம் வெளியிட்ட சமூகவலைதள பதிவில், தனது தோழி அனுஷ்கா யாதவுடனான தனது நீண்டகால உறவை அறிவித்து, அவர்கள் கடந்த 12 ஆண்டுகளாக காதலித்து வருவதாகவும், உறவில் இருப்பதாகவும் சமூகவலைதள பதிவில் பகிர்ந்து குறிப்பிட்டு இருந்தார். தேஜ் பிரதாப் அறிவித்த மறுநாள் நேற்று அவரது தந்தையான லல்லு இந்த அறிவிப்பை வெளியிட்டு உள்ளார்.



இந்நிலையில், லல்லு வெளியிட்டுள்ள அறிக்கையில், தனிப்பட்ட வாழ்க்கையில் தார்மீக மதிப்புகளைப் புறக்கணிப்பது சமூக நீதிக்கான கட்சியின் கூட்டுப் போராட்டத்தை பலவீனப்படுத்துகிறது. தேஜ் பிரதாப்பின் நடத்தை குடும்ப மதிப்புகள் அல்லது மரபுகளுக்கு ஏற்ப இல்லை. அவரது பொறுப்பற்ற நடத்தை, குடும்ப மதிப்பு மற்றும் பொது ஒழுக்கம் ஆகியவற்றை கடைபிடிக்காத காரணத்தால், கட்சி மற்றும் குடும்பத்தில் இருந்து நீக்குகிறேன். கட்சியிலிருந்து 6 ஆண்டுகள் நீக்கப்படுகிறார். இனிமேல், அவருக்கு கட்சியிலும், குடும்பத்திலும் எந்தப் பங்கும் இருக்காது. நான் எப்போதும் பொது வாழ்க்கையில் ஒழுக்கத்தை கடைபிடிப்பவன். கீழ்ப்படிதலுள்ள குடும்ப உறுப்பினர்கள் பொது வாழ்க்கையில் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு பின்பற்றி வருகின்றனர் என்று கூறியுள்ளார்.

# அண்ணா பல்கலை., மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கு; மே 28ல் தீர்ப்பு

**சென்னை, மே 26-**

அண்ணா பல்கலை மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில், மே 28ல் சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கிறது.

கடந்த டிச.,23ம் தேதி, சென்னை கிண்டி அண்ணா பல்கலை வளாகத்தில், 19 வயது மாணவி பாலியல் வன்முறை செய்யப்பட்டார். இது தொடர்பாக, சென்னை கோட்டூர்புரம் மகளிர் போலீசார், அதே பகுதியை சேர்ந்த, தி.மு.க., பிரமுகர் ஞானசேகரன், 37, என்பவரை கைது செய்தனர்.

சம்பவ இடத்தில், ஞானசேகரன் ஒருவரை போனில் தொடர்பு கொண்டு 'சார்' என்று அழைத்து பேசியதாக தகவல் வெளியானது. தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி, மூன்று பெண் ஐ.பி.எஸ்., அதிகாரிகள் அடங்கிய, சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரித்து, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை, சென்னை அல்லிகுளம் வணிக வளாகத்தில் செயல்படும், மகளிர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. அனைத்து தரப்பு விசாரணைகளும் முடிவு அடைந்தது. இந்த வழக்கில், மே 28ல் சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கிறது.

### பெண்களுக்கு போர்க்குணம் இல்லை:

# பா.ஜ.க. எம்.பி. பேச்சால் சர்ச்சை

**சண்டிகர், மே 26-**

பயங்கரவாதிகளை எதிர்த்து போராடியிருந்தால், உயிரிழப்புகள் குறைவாக இருந்திருக்கும் என பா.ஜ.க. எம்.பி. ராம் சந்தர் ஜங்ரா கூறியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அரியானாவின் பிவானி பகுதியில் மராட்டிய ராணி அஹில்யாபாய் ஹோல்கரின் 300-வது பிறந்த நாளில் விழா கொண்டாடப்பட்டது. அப்போது பஹல்காம் தாக்குதல் குறித்து பேசிய அவர், "நமது மக்கள் தங்கள் கைகளை கட்டிக்கொண்டு உயிரை இழந்திருக்கிறார்கள். சுற்றுலா பயணிகள் ஒருவேளை அக்னி வீர் பயிற்சி பெற்றிருந்தால், வெறும் 3 பயங்கரவாதிகளால் 26 பேரை கொன்றிருக்க முடியாது.

பயங்கரவாதிகளை எதிர்த்து அவர்கள் போராடியிருக்க வேண்டும். எதிர்த்து போராடியிருந்தால், உயிரிழப்புகள் குறைவாக இருந்திருக்கும். பஹல்காம் தாக்குதலில் கணவரை இழந்த பெண்களிடம் போர்க்குணம், துணிச்சல் மற்றும் வைராக்கியம் இல்லை. எனவே, அவர்கள் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்'' என்று தெரிவித்தார்.

பா.ஜ.க. எம்.பி. சந்தர் ஜங்ரா பேசிய கருத்து பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில், கணவரை இழந்த துக்கத்தில் இருக்கும் பெண்களை விமர்சிக்கும் வகையில் உள்ளது என பல்வேறு தரப்பினர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இது குறித்து காங்கிரஸ் எம்.பி. ஜெய்ராம் ரமேஷ், "பஹல்காம் தாக்குதல் ஏற்படுவதற்கு காரணமான பாதுகாப்பு குறைபாடு குறித்து கேள்வி எழுப்புவதற்கு பதிலாக, பா.ஜ.க. தலைவர்கள் இந்திய ராணுவத்தையும், உயிர் தியாகம் செய்தவர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் தொடர்ந்து அவமதித்து வருகின்றனர்'' என்று கூறியுள்ளார்.

அதே போல், சமாஜ்வாடி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ், "பா.ஜ.க. ஒரு கட்சி அல்ல, மாறாக பெண்களுக்கு எதிரான மன நிலையின் சதுப்பு நிலம்'' என்று காட்டமாக விமர்சித்துள்ளார்.


# உலகின் 4-வது பெரிய பொருளாதார நாடு இந்தியா: நிதி ஆயோக் சி.இ.ஓ

**புதுடெல்லி, மே 26-**

இந்தியா தற்போது ஜப்பானை முந்தி உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடாகியுள்ளது என்று நிதி ஆயோக்கின் தலைமை செயல் அதிகாரி பி.வி.ஆர். சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

10வது நிதி ஆயோக் நிர்வாகக்குழு கூட்டத்துக்கு பின்பு செய்தியாளர்களிடம் பேசிய சுப்ரமணியம் கூறியதாவது: தற்போது நாம் உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடு.

நாம் இப்போது 4 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைந்துள்ளோம். இந்தியா இப்போது ஜப்பானை விட பெரியது.



அமெரிக்கா, சீனா மற்றும் ஜெர்மனி மட்டுமே இப்போது நமக்கு முன்னால் உள்ளன. திட்டமிட்டு சிந்திக்கப்படுவதில் நாம் உறுதியாக இருந்தால் இன்னும் 2 - 3 ஆண்டுகளில் நாம் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மாறுவது பெரிய விஷயம் இல்லை.'' என்று தெரிவித்தார்.

வளர்ந்து வரும் சர்வதேச பொருளாதார பரப்பில், ஒரு மாற்று உற்பத்திக்கான மையமாக இந்தியா தன்னை நிலை நிறுத்திக் கொண்டு வரும் வேளையில் இந்த மைல்கல் நிலை எட்டப்பட்டுள்ளது. சர்வதேச விநியோகச் சங்கிலிகளில் தனது பங்கினை ஆழப்படுத்தவும், தனது மேக் இன் இந்தியா உந்துதலின் கீழ் புதிய முதலீடுகளை ஈர்க்கவும் இந்தியா முயற்சித்து வரும் வேளையில் இந்தப் பொருளாதார முன்னேற்றம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது'' என தெரிவித்தார்

### காட்டாற்றின் நடுவே சிக்கிய கார்:

# நூலிழையில் உயிர் தப்பிய 3 பேர்



**கூடலூர், மே 26-**

ஓவேலி காட்டாற்றின் நடுவே வெள்ளத்தில் கார் சிக்கியது. அதிர்ஷ்டவசமாக காரில் இருந்த 3 பேர் உயிர் தப்பினர்.

நீலகிரி, கோவை மாவட்டங்களில் நேற்றும், இன்றும் மிக அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. இதனால், நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்கள் மூடப்பட்டுள்ளன. உள்ளூர் மக்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கூடலூர் ஓவேலி வனச்சரகத்தில் யானை விரட்டும் காவலராக பணியாற்றி வருகிறார் ராஜேஷ். இவர் விடுமுறை பெற்று கேரளா மஞ்சேரியை சேர்ந்த நண்பர்கள் ஆண்டோ தாமஸ் (53), அருண் தாமஸ் (44), ஆகியோருடன், ஓவேலி அண்ணா நகர் - தருமகிரி சாலை வழியாக கூடலூர் நோக்கி காரில் சென்று கொண்டிருந்தார். செல்லும் வழியில் ஆற்றைக் கடக்க முயன்ற போது, கார் வெள்ளத்தில் சிக்கியது. மூவரும் தப்பிக்க வழியின்றி, காரின் மீது ஏறி நின்று சத்தமிட்டனர். கூடலூர் நிலைய தீயணைப்பு வீரர்கள், நள்ளிரவு 1:00 மணிக்கு, அப்பகுதிக்கு சென்று, போராடி அதிகாலை 3:30 மணிக்கு மூவரையும் உயிருடன் மீட்டனர்.

# பெரியார் பெயருக்கு பின்னால் சாதி பெயர்: யு.பி.எஸ்.சி. தேர்வில் சர்ச்சை

**சென்னை, மே 26-**

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ். உள்ளிட்ட 24 வகையான குடிமை பணிகளுக்கு இந்த ஆண்டு 979 பேரை தேர்வு செய்வதற்கான சிவில் சர்வீஸ் முதல்நிலை தேர்வு நாடு முழுவதும் நேற்று நடைபெற்றது.

சென்னையில் 69 மையங்களில் தேர்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த தேர்வு மையங்களில் 24,364 பேர் முதல்நிலை தேர்வை எழுதினார்கள். இதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு அடுத்த கட்டமாக முதன்மை தேர்வு நடத்தப்படும். தேர்வர்கள் முறைகேட்டில் ஈடுபடுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மண்ணடியில் உள்ள தேர்வு மையம் ஒன்றில் இந்தியில் மட்டுமே வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய தகவல்கள் ஒட்டப்பட்டிருந்தன. இதை பார்த்து தேர்வு எழுத சென்றவர்கள் குழப்பம் அடைந்தனர்.

இந்நிலையில், யு.பி.எஸ்.சி. தேர்வில் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கியவர் யார் என்ற கேள்விக்கு கொடுக்கப்பட்ட பதிலால் சர்ச்சை எழுந்துள்ளது. சுயமரியாதை இயக்கம் தொடங்கியது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியால் புதிய சர்ச்சை எழுந்துள்ளது. கேள்வித்தாளில் 4 விடைகளில் ஒன்றில் பெரியார் பெயருடன் அவரது சாதி பெயரையும் இணைத்து வெளியிடப்பட்டுள்ளன. இது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதனால், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயலுக்கு பெரியாரிய இயக்கங்கள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

### நீலகிரியில் கொட்டித்தீர்க்கும் கனமழை;

# மரம் விழுந்து கேரள சிறுவன் பலி

**ஊட்டி, மே 26-**

நீலகிரியில் நேற்று மரம் விழுந்து, 15 வயது சிறுவன் உயிரிழந்த சம்வம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலை பகுதிகளில் அதிக கனமழை முதல் மிக அதிக கனமழை வரை பெய்ய வாய்ப்பு உள்ளது என ரெட் அலர்ட் விடுக்கப்பட்டு உள்ளது. கோவை, நீலகிரிக்கு மாநில பேரிடர் மீட்பு குழுவினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நீலகிரி மாவட்டம், ஊட்டியில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது. இதனால் பல்வேறு சுற்றுலா தலங்கள் மூடப்பட்டு உள்ளது. தொட்டபெட்டா, பைரன் பாரஸ்ட், லேம்ஸ்ராக், சூட்டிங் பாயின்ட், படகு இல்லம் உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா தலங்கள் மூடப்பட்டுள்ளன. ஊட்டியில் 6 இடங்களில் மரங்கள் விழுந்த நிலையில் உடனுக்குடன் மரங்கள் வெட்டி அகற்றப்பட்டன. மின்சாரம் தொடர்பான பாதிப்பு இருந்தால் 9498794987 என்ற எண்ணை தொடர்பு கொண்டு புகார் அளிக்க வேண்டும். அவசர கால உதவிக்கு 1077 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

கேரள மாநிலம் கள்ளிக்கோட்டையில் இருந்து ஊட்டி நோக்கி வந்த கார் மீது மரம் விழுந்ததில் ஆதிதேவ் என்ற சிறுவன் உயிரிழந்தார். கேரளாவில் இருந்து குடும்பத்துடன் சுற்றுலா வந்த இடத்தில் துயரம் நிகழ்ந்துள்ளது.

### வார இறுதி நாளையொட்டி

# குமரியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

**கன்னியாகுமரி, மே 26-**

வார விடுமுறையான நேற்று கன்னியாகுமரிக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்தனர்.

உலக புகழ் பெற்ற சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். பள்ளிகளுக்கு கோடை விடுமுறை அளிக்கப்பட்டுள்ள நிலையில் கன்னியாகுமரிக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் ஏராளமானோர் வருகின்றனர்.

இதனிடையே, கேரளாவில் பருவமழை துவங்கிய நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்திலும் அதன் தாக்கம் தெரிகிறது. இரண்டு நாட்களாக பலத்த சூறைக்காற்றுடன் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், வார விடுமுறையான நேற்று கன்னியாகுமரிக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்தனர்.

அவர்கள் அதிகாலையில் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரையில் சூரிய உதயம் காண குவிந்தனர். இருப்பினும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதால், சூரிய உதயத்தை காணாமல் ஏமாற்றம் அடைந்தாலும், மழையில் நனைந்தபடி, கடலில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



நிதி ஆயோக்கில் பங்கேற்காததுடன் மாநில அந்தஸ்துக்காக முதல்வர் ரங்கசாமி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் இண்டியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் மாநில அந்தஸ்தை போராடி பெறுவோம். அதுதான் எங்கள் இலக்கு. அதற்காக நீதிமன்றத்தையும் நாடுவோம்.

\- நாராயணசாமி



மத்திய அரசோடு மாநில அரசு முற்றாக விலகி நிற்கவோ, பகைத்துக் கொள்ளவோ முடியாது. மத்திய அரசு கல்விக்கு நிதி ஒதுக்காமல் இருப்பது மக்களுக்கு விரோதமான அணுகுமுறை. ஒரு வேளை அதிக பலத்தோடு பா.ஜ.க. இருந்திருந்தால் இன்னும் என்னவெல்லாம் செய்வார்கள் என்பதற்கு இது ஒரு சான்று.

\- திருமாவளவன்



சொத்து வரி உயர்வால் பல பொருட்களின் விலைவாசி உயர்ந்து அனைத்து தரப்பு மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் வீட்டு உரிமையாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.எனவே தமிழக அரசு, இனிமேல் மக்கள் மீது வரிச்சுமையை ஏற்றாமல், உயர்த்திய சொத்து வரி உயர்வை திரும்பப் பெற வேண்டும்.

\- ஜி.கே.வாசன்



ஒரு நாட்டின் வேளாண் குடிமகன் வாழ்கிறான் என்றால் அந்த நாடு வளர்கிறது என்று பொருள். ஒரு குடிமகன் வாழ முடியாமல் சாகிறான் என்றால் அந்த நாடு நாடல்ல என்று பொருள். இன்று வேளாண் குடிமகன் சாவது என்பது செய்தி. ஆனால் அவை பிற்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படப் போகிறது என்பதற்கான முன்னறிவிப்பு.

\- சீமான்

# தந்தை இறந்த நிலையிலும் சாதித்த திருச்சி மாணவிகள்: துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு



சென்னை, மே- 26

தந்தையர் மறைந்த நிலையிலும் பொதுத்தேர்வினை ஆர்வத்துடன் எழுதியதுடன், அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சியடைந்த திருச்சி மாணவிகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டி கேடயம் வழங்கினார்

2024-2025 ஆண்டுக்கான மேல்நிலை பொதுத்தேர்வு நடைபெற்றபோது திருச்சி மாவட்டம் கருங்குளம், அரசு மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு பயின்ற பி. சத்ய பிரியா என்ற மாணவியின் தந்தை மாரடைப்பு காரணமாக இறந்து விட்டார். தந்தையார் மறைந்த நிலையில் 11.3.2025 அன்று நடைபெற்ற கணிதத் தேர்வினை எழுதியதுடன், கணிதத்தில் 79 மதிப்பெண்கள் பெற்று, மொத்தம் 528 மதிப்பெண்களுடன் பள்ளியில் முதலாவதாகவும் வந்துள்ளார்.

2024-2025 ஆண்டுக்கான மேல்நிலை பொதுத்தேர்வு நடைபெற்றபோது திருச்சி மாவட்டம் தேனேரிப்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 வகுப்பு ப ச.சாலினி என்ற மாணவியின் தந்தை மாரடைப்பு காரணமாக இறந்து விட்டார். இந்நிலையில் 13.3.2025 அன்று நடைபெற்ற கணினி அறிவியல் தேர்வினை எழுதியதுடன், கணினி அறிவியலில் – 78 மதிப்பெண்களுடன், மொத்தம் 367 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்துள்ளார்.

புதுக்கோட்டை, திருச்சி , கரூர் மாவட்டங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக திருச்சி வருகை தந்த துணை முதலமைச்சர் . உதயநிதி ஸ்டாலின் திருச்சியை சேர்ந்த இந்த இரண்டு மாணவிகளும் கல்விக்கு அளித்த முக்கியத்துவத்தை பாராட்டி, தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சியடைந்ததற்காக பொன்னாடை போர்த்தி, கேடயம் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் .கே.என்.நேரு, முனைவர் கோ.வி.செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார்., முதன்மைக் கல்வி அலுவலர் .கிருஷ்ண பிரியா மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர்

# சென்னை புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் திருக்கோயில் திருத்தேர் வெள்ளோட்டம்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு வடம் பிடித்து தொடங்கி வைத்தார்

சென்னை,மே.26

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.பி.கே.சேகர் பாபு (25.05.2025) சென்னை, புரசைவாக்கம் அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ.81 இலட்சம் மதிப்பில் செய்யப்பட்டுள்ள புதிய மரத் தேரின் வெள்ளோட்டத்தினை வடம் பிடித்து தொடங்கி வைத்தார்.

பி ன் னர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,800 ஆண்டுகள் பழமையான அருள்மிகு கங்காதேசுவரர் திருக்கோயிலுக்கு 16 ஆண்டுகளுக்குப் பிறகு 4.82 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 28.11.2024 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. சட்டமன்ற அறிவிப்பின்படி இத்திருக்கோயிலுக்கு ரூ.7 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத்தேர் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. வரும் ஜனவரி மாதத்திற்குள் பக்தர்கள் நேர்த்திகடன் செலுத்தும் வகையில் தங்கத்தேர் ஒப்படைக்கப்படும். இத்திருக்கோயிலின் சிதிலமடைந்த திருத்தேருக்கு பதிலாக ரூ.81 இலட்சம் மதிப்பில் புதிய மரத்தேரும், ரூ.15.40 இலட்சம் மதிப்பில் தேர் பாதுகாப்பு கொட்டகையும் அமைக்கப்பட்டு இன்றையதினம் வெள்ளோட்டம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்களின் முழு ஒத்துழைப்போடு மாநகராட்சி நிதி ரூ.1.29 கோடி மதிப்பீட்டில் இத்திருக்கோயிலின் திருக்குளம் சீரமைக்கப்பட்டும், திருக்கோயில் நிதி ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் நந்தவனமும், ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் காரியகூடமும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் திருக்குளம் மின் அலங்காரம், அன்னதானக் கூடம், அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு அமைக்கப்படவுள்ளன. அதேபோல் தஞ்சாவூர் மாவட்டம், பட்டீஸ்வரம், அருள்மிகு தேனுபுரீஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.87 இலட்சம் மதிப்பில் புதிய மரத் தேர் செய்யப்பட்டு சுமார் 100 ஆண்டுகளுக்கு பிறகு இன்றைய தினம் வெள்ளோட்டம் நடைபெற்றுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஏற்பட்ட பிறகு இந்து சமய அறநிலையத்துறையில் முன் எப்போதும் இல்லாத வகையில் திருப்பணிகளும், குடமுழுக்குகளும் நடைபெற்று வருகின்றன. இதுவரை 2,970 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. ரூ.7,674 கோடி மதிப்பீட்டிலான 7,560.73 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. நவீன ரோவர் கருவியின் மூலம் திருக்கோயில் நிலங்களை அளவிடும் பணிகளில் இதுவரை 2,01,158 ஏக்கர் நிலங்கள் அளவிடப்பட்டு 1,24,111 எல்லைக் கற்கள் நடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கடந்த 4 ஆண்டுகளில் ரூ.5,970.26 கோடி மதிப்பில் 25,813 பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் உபயதாரர்கள் மட்டும் ரூ.1,351 கோடி மதிப்பிலான திருப்பணிகளை செய்து தருகின்றனர். இது உபயதாரர்கள் இந்த அரசின் மீதும், இந்து சமய அறநிலையத்துறையின் மீதும் வைத்துள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் உபயதாரர்கள் நிதியாக ரூ.200 கோடி கூட கிடைக்கப்பெறவில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகம விதிகள் அல்லாத திருக்கோயில்களில் அர்ச்சகர் நியமனம் தொடர்பாக துறை சார்ந்த வழக்கறிஞர்களோடும், நீதிமன்றங்களில் இது தொடர்பான வழக்குகளில் ஆஜரானவர்களோடும் ஒரு கலந்தாய்வுக் கூட்டம் நடத்தியுள்ளோம். வெகு விரைவில் ஆகம விதிகள் அல்லாத திருக்கோயில்களில் அர்ச்சகர் நியமனம் தொடர்பான பணிகள் முழு வீச்சில் தொடங்கப்படும். அதேபோல் ஆகம விதிகளுக்கு அமைக்கப்பட்ட குழுவில் ஒரு நபருக்கு பதிலாக வேறொருவரை நியமிக்க மாண்பமை உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதற்கான முன்னேற்பாடுகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து விரைவில் மாற்று நபர் குறித்த விபரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வோம். அந்த பணி முடிவுற்றவுடன் ஆகம விதிகளை கண்டறிகின்ற குழுவின் பணி தொடங்கப்படும்.



இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நடத்தப்படும் 25 பள்ளிகள், 9 கலைக் கல்லூரிகள் மற்றும் ஒரு பாலிடெக்னிக் கல்லூரி உட்பட 10 கல்லூரிகளில் 22,807 மாணவ, மாணவியரும் கல்வி பயின்று வருகின்றனர். ஒவ்வொரு கல்லூரியிலும் பயில்வதற்கு ஆண்டுதோறும் அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் வரப்பெறுகின்றன. மருதமலை, திருக்கோயில் பள்ளி உள்ளிட்ட பல பள்ளிகள் 100 சதவீத தேர்ச்சியை பெற்றுள்ளன. திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு கடந்த நாண்காண்டுகளில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு ரூ.140 கோடி மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கொளத்தூர், அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இறுதியாண்டு பயின்ற மாணவர்களில் இத்தாண்டு 206 மாணவர்களுக்கு வளாக நேர்காணல் மூலம் TCS, Axis Bank போன்ற தனியார் நிறுவனங்களில் வேலை கிடைத்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிந்தையில் உதித்த திட்ட திட்டங்களான படைப்பகம் மற்றும் கல்விச் சோலை ஆகியவற்றை இந்து சமய அறநிலையத்துறையின் 5 பள்ளி மற்றும் கல்லூரிகளில் தொடங்கவுள்ளோம். முதல்வரின் படைப்பகம் மற்றும் கல்விச் சோலை திட்டங்கள் தொடங்கிய ஆறு மாதத்திற்குள்ளாகவே அதில் பயின்ற 6 மாணவர்கள் TNPSC தேர்வில் பெற்றுபெற்று முதலிடம் பெற்றுள்ளனர். இந்து சமய அறநிலையத்துறை நடத்துகின்ற அர்ச்சகர், ஓதுவார், தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சி பள்ளிகள் மூலம் ஆண்டிற்கு சுமார் 300 நபர்கள் திருக்கோயில் சார்ந்த அர்ச்சகர், ஓதுவார் போன்ற பணியிடங்களுக்கு தயார்படுத்தி கொண்டிருக்கின்றோம்.

எந்த திருக்கோயிலின் குடமுழுக்கு என்றாலும் காலை நேரத்தில் தான் நடக்கும், தமிழகம் மட்டுமின்றி பிற திருக்கோயில்களுக்கும் குடமுழுக்கிற்கு நாள், நேரம் குறிக்கின்ற வல்லுநர்களாக திரு.ராஜா பட்டர் அவர்களும், திரு.பிச்சை குருக்கள் அவர்களும் தான் திகழ்கின்றனர். அவர்கள் திருச்செந்தூர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த முகூர்த்த நேரம் காலை 6 மணியிலிருந்து 7.30 மணி வரை குறித்து கொடுத்தனர். அது சம்பந்தமான சர்ச்சையினால் ஒரு சிலர் நீதிமன்றத்தை அணுகினார்கள். நீதிமன்ற தீர்ப்பில் 5 நபர்கள் கொண்ட குழு அமைத்திட உத்தரவிட்டார்கள். அதனைத் தொடர்ந்து, நேற்றைய தினம் 5 நபர்களை கொண்ட அமைக்கப்பட்டுள்ளது. அதில் போத்தி ஒருவரும், ராஜா பட்டர், பிச்சை குருக்கள், சபரி மலை ஐய்யப்பன் திருக்கோயில் தந்திரி ஒருவர் மற்றும் வழக்கு தொடர்ந்தவர் ஒருவர் என 5 நபர்கள் அடங்கிய கூட்டம் நடைபெற்றது. சபரி மலை கோயில் தந்திரி அவர்கள் வீடியோ கான்பரன்ஸ் மூலம் பங்கேற்றார். இக்கூட்டத்தில் நான்கு நபர்கள் முகூர்த்த நேரம் என ஒரே நேரத்தை குறிப்பிட்டுள்ளனர். வழக்கு தொடர்ந்தவர் மட்டுமே அவருடைய நிலைபாட்டிலேயே நின்று கொண்டிருக்கின்றார். இதனை நீதிமன்றத்திற்கு தெரிவித்து அதன் வழிகாட்டுதலோடு குறித்த நாட்களிலும் முகூர்த்தத்தில் திருச்செந்தூர் குடமுழுக்கு நடைபெறும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் அறுபடை வீடுகளிலும் தொடர்ந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருப்பரகுன்றத்தில் ஜூலை மாதம் 14 ஆம் தேதியும், திருச்செந்தூரில் ஜூலை மாதம் 7 ஆம் தேதியும் குடமுழுக்கும் நடைபெறவுள்ளது. கடந்த ஆண்டு பழநியில் குடமுழுக்கு நடைபெற்றது. திருத்தணியில் பெருந்திட்ட வரைவின் கீழ் இரண்டு கட்டங்களாக பணிகள் நடைபெற்று வருகின்றன. மருதமலையில் மின்தூக்கி அமைக்கப்பட்டு வருவதோடு, ஆசியாவிலேயே மிக உயரமாக 184 அடியில் முருகன் சிலை அமைக்கப்படவுள்ளது. சுவாமிமலையில் மின்தூக்கி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்படி அறுபடை வீடுகள் மற்றும் அறுபடை அல்லாத வீடுகளுக்கும் திருப்பணிகள் மேற்கொண்டு தமிழ் கடவுளாம் முருகப் பெருமானுக்கு மென்மேலும் புகழ் சேர்க்கின்ற ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி திகழ்கிறது என்றார்.

**கலந்து கொண்டோர்**

இ ந் நி க ழ் ச் சி யில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், இணை ஆணையர் ஜ.முல்லை, உதவி ஆணையர்க.சிவக்குமார், திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் டாக்டர் பெ.வெற்றிகுமார் மற்றும் அறங்காவலர்கள், திரு.எழும்பூர் வி.சுதாகர், மாமன்ற உறுப்பினர்.பரிதிஇளம்சுரிதி, திருக்கோயில் செயல் அலுவலர்எம்.ஆச்சி சிவப்பிரகாசம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நேரலையில் வந்து பேசும் நித்யானந்தாவை கைது செய்ய இந்து துறவிகள் அமைப்பு கோரிக்கை

சென்னை, மே- 26

அடிக்கடி நேரலையில் வந்து பேசும் நித்யானந்தாவை கைது செய்ய வேண்டும் என்று இந்து துறவி பக்தர் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது

இது குறித்து அந்த அமைப்பின் மாநிலத்தலைவர் பால்ராஜ், செயலாளர் பந்தல் நடராஜன் மற்றும் பொருளாளர் நம்பிராஜன் ஆகியோர் சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தனர் அப்போது அவர்கள் கூறுகையில்

இந்து மதத்திற்கு தாங்கள் சேவை செய்வதாக அறக்கட்டளைகள் தொடங்கி தமிழகத்தில் 26 இடங்களில் நன்கொடையாக கோடிக்கணக்கில் பணத்தையும் நூற்றுக்கணக்கான கட்டிடங்களையும் நிலங்களையும் நன்கொடையாக பெற்றுள்ளது, நித்யானந்தாவின் இந்து மத அறக்கட்டளை, இந்த சொத்துக்கள் அனைத்தும் தற்போது அந்நியர்களின் கைக்குள் சிக்கியிருப்பதாக கூறப்படுகிறது, நித்யானந்தாவை கடவுளாக நினைத்து அவரது பக்தர்கள் இச்சொத்துக்களை வழங்கினார்கள், ஆனால் தற்போது நித்யானந்தா தியான பீட அறக்கட்டளையிலிருந்து நித்யானந்தா விலகி விட்டதாக தனது நீதிமன்றத்தில் அபிடவிட் தாக்கல் செய்துள்ளார் , இதனால் சொத்துக்களை தானம் கொடுத்தவர்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர், இந்து மதத்திற்காக சேவை செய்வதற்காக முதலில் அறக்கட்டளை தொடங்கிய நித்யானந்தா, இப்போது அதனை தியான பீடமாக மாற்றி விட்டதால் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது நல்ல காரியங்களுக்காகவும் இந்து மத நம்பிக்கையுடையவர்களுக்காகவும் நித்யானந்தா அறக்கட்டளையை இனி பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது,

எனவே தியான பீட அறக்கட்டளை தொடர்பாக நடைபெறும் பல வழக்குகளை ஒருங்கிணைத்து உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்து தானம் கொடுத்த சொத்துக்களை அவர்களுக்கே மீண்டும் திருப்பி வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

நித்யானந்தா ஆசிரமத்தில் காணாமல் போனவர்களை கண்டுபிடித்து தரவேண்டும் அது குறித்து உண்மைகளை விசாரணை நடத்தி வெளியிட வேண்டும் மேலும் நித்யானந்தா தலைமறைவாக இருந்து கொண்டு நீதித்துறைக்கும் காவல் துறைக்கும் சவால் விட்டுக்கொண்டிருக்கிறார். அவர் நீதிமன்றத்தில் ஆஜராவதில்லை, நீதிமன்றத்தை மதிப்பதும் இல்லை, இந்திய இறையாண்மையை மீறி செயல்படுகிறார். சமூக வலைதளங்களில் நேரலையில் தனது கருத்துக்களை பரப்பி இளைஞர்களை மூளை சலவை செய்து வருகிறார், . கற்பனையான கைலாச நாட்டின் பெயரில் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் கைலாசா என்ற நோட்டரி முத்திரையில் போலியாக கருத்துக்களை வெளியிட்டு நீதித்துறையையும் காவல்துறையையும் கேலியும் கிண்டலும் செய்து வருகிறார் நித்யானந்தா எங்கிருந்து நேரலையில் பேசுகிறார் என்று கண்டுபிடித்து கைது செய்ய வேண்டும் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்

# ராயபுரம் பகுதியில் இருசக்கர வாகனத்தை திருடியவர் கைது

சென்னை மே 26-

சென்னை, இராயபுரம், எஸ்.என்.செட்டி தெருவில் பரிதா, என்பவர் வசித்து வருகிறார். இவரது கணவர் கடந்த 22 ந் தேதி அன்று அவரது இருசக்கர வாகனத்தை வீட்டின் முன்பு நிறுத்தி விட்டு மறு நாள் காலை பார்த்தபோது, அவரது இருசக்கர வாகனத்தை யாரோ திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து பரிதா இராயபுரம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

இராயபுரம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற ஶ்ரீநாத், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் இருசக்கர வாகனம் மீட்கப்பட்டது.

விசாரணையில் எதிரி ஶ்ரீநாத் அவரது கூட்டாளியுடன் சேர்ந்து மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்றது தெரியவந்தது. மேலும் விசாரணையில் எதிரி ஶ்ரீநாத் மீது ஏற்கனவே இராயபுரம் காவல் நிலையத்தில் ஒரு குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி ஶ்ரீநாத் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.



**வளசரவாக்கம் மண்டலம் 147 வது வார்டுக்கு உட்பட்ட மேட்டுக்குப்பம் பிள்ளையார் கோவில் தெரு, சீமாத்தம்மன் நகர் பெரியார் தெரு மற்றும் வார்டு முழுவதும் ரூ 2.35 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் பணிகளை மாமன்ற உறுப்பினர் ரமணிமாதவன் துவக்கி வைத்தார். உடன் வட்ட செயலாளர் எஸ்.ஜி.மாதவன் உள்ளனர்.**

# உடல்வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் கஞ்சா வைத்திருந்த இருவர் கைது

சென்னை மே 26-

சென்னை பெருநகர காவல், தண்டையார்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் நேற்று காலை, பழைய வண்ணாரப்பேட்டை, சுனாமி குடியிருப்பு பின்புறம் கண்காணித்தபோது, அங்கு 3இளைஞர்கள் கஞ்சா மற்றும் உடல்வலி நிவாரண மாத்திரைகளை சட்டவிரோதமாக விற்பனை செய்து கொண்டிருந்தது தெரியவந்ததின்பேரில், காவல் குழுவினர் மேற்படி 3 இளைஞர்களையும் கஞ்சா மற்றும் உடல்வலி நிவாரண மாத்திரைகளுடன் பிடித்து விசாரணை செய்தனர்.தண்டையார்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் வழக்கு பதிவு செய்து, சட்டவிரோதமாக கஞ்சா மற்றும் உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த 1.கௌதம், 2.கிஷோர், அகிய இருவர் மற்றும் 17 வயது இளஞ்சிறாரிடம் விசாரணை செய்தனர். அவர்களிடமிருந்து 25 உடல்வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் 200 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் பிடிபட்ட 17 வயது இளஞ்சிறார் மீது ஏற்கனவே ஒரு வழிப்பறி வழக்கு உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்திலும், இளஞ்சிறார், சிறார் நீதிக்குழுமத்திலும் ஆஜர் செய்யப்பட உள்ளனர்.

# தூர்வாரும் பணியின்போது அகற்றப்படும் பனங்கன்றுகளை மறுநடவு செய்ய மாவட்ட வனத்துறை முன்வர வேண்டும்

## கிரீன் நீடா அமைப்பு வலியுறுத்தல்

சென்னை மே 26-

தூர்வாரும் பணியின் போது அகற்றப்படும் பனங்கன்றுகளை மறுநடவு செய்ய மாவட்ட வனத்துறை முன்வர வேண்டும் என கிரீன் நீடா அமைப்பு வலியுறுத்தியுள்ளது, இது குறித்து கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மு.ராஜவேலு விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

மேட்டூர் அணை திறக்கப்படவுள்ள நிலையில் டெல்டா மாவட்டங்களில் ஆறுகள், பாசன கால்வாய்கள், வடிகால் கால்வாய்கள் உள்ளிட்ட பல நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் ஜேசிபி இயந்திரம் மூலம் இரவு பகலாக நடைபெற்று வருகிறது. ஆற்றுக்கரைகள், கால்வாய்களில் நீர் பாசனத்திற்கு இடையூறாக இருக்கிறது என நூற்றுக்கணக்கான பனங்கன்று வேரோடு அகற்றி எறியப்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அடுத்த வங்கநகர் ஊராட்சி ,ஓவர்குடி வடக்கு வெளி வாய்க்கால் பகுதியில் பத்து, பதினைந்து ஆண்டுகள் நன்கு வளர்ந்த பனங்கன்றுகளை அகற்றியுள்ளனர். இது வேதனை அளிப்பதாக இருக்கிறது.

அகற்றிய அனைத்து பனங்கன்றுகளையும் தூர் வாரிய கால்வாய் மற்றும் ஆற்றுக்கரைகளிலேயே மறு நடவு செய்திட மாவட்ட வனத் துறை அதிகாரிகள் முன்வர வேண்டும். நிலத்தடி நீர் வற்றாமல் இருப்பதற்கும், மண்ணரிப்பை தடுக்கும் அரணாக விளங்கும் பனை மரங்களை பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து பாதுகாத்து, பராமரித்து வருகிற நிலையில் ஆயிரக்கணக்கான பனை மரங்கள் தூர்வாரும் பணியின் போது அழிக்கும் செயல் தவறான முன்னுதாரணமாகிவிடுகிறது. இடி, மின்னலின் போது வயல்வெளியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் உயிர் இழப்பு ஏற்படுவதை தவிர்க்க ஒரிசா மாநில அரசு பனை விதைகள் நடும் பணியை வருவாய்த்துறை மூலம் செயல்படுத்தி வருகிறது.

பேரிடராக அறிவித்து பனை விதைகள் நடுவதற்கு கோடிக்கணக்கான ரூபாய் நிதியை ஒதுக்கி பனை விதைகளை ஆண்டுதோறும் நட்டு வருகிறது ஒரிசா மாநில அரசு.

தமிழ்நாட்டின் மாநில மரமான பனையை வெட்டக்கூடாது என தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பிற்கு பின்பு பனை மரங்கள் வெட்டப்படுவது குறைந்துள்ளது. வரவேற்கத்தக்கது. இந்நிலையில் ஆண்டுதோறும் தூர் வாரும் பணியின் போது இளம் பனங்கன்றுகள் வெட்டி சாய்க்க பாடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும். தவிர்க்க முடியாத பட்சத்தில் வெட்டப்படும் இளம் பனங்கன்றுகளை உடனடியாக மறுநடவு செய்திட வேண்டும்.

தூர்வாரும் பணிகள் முடிவுற்ற அனைத்து ஆற்றங்கரைகளிலும் பனை விதைகளை விதைக்க மாவட்ட நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# கிழக்கு கடற்கரை சாலையில் திரிந்த மாடுகளை பிடித்து அபராதம்

சென்னை மே 26-

கிழக்கு கடற்கரை சாலையில் பொழுதுபோக்கு மையங்கள், திரையரங்குகள், விடுதிகள், சுற்றுலாத்தலங்கள் உள்ளதால் எப்போதும் போக்குவரத்து மிகுந்து காணப்படும். இச்சாலையில் சமீப காலமாக மாடுகள் அதிகளவில் சுற்றித் திரிவதால் போக்குவரத்துக்கு இடையூறு மற்றும் விபத்துக்கள் ஏற்படுவதாக வாகன ஓட்டிகள் புகார் அளித்தனர். அதன்பேரில், கானத்தூர் போலீசார் நேற்று கிழக்கு கடற்கரை சாலையில் சுற்றித் திறந்த மாடுகளை பிடித்து வேன்களில் ஏற்றிச் சென்று ஊராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர். இதனையடுத்து ஊராட்சி நிர்வாகம் மாட்டின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதித்ததோடு, இனி மாடுகளை சாலையில் திரிய விட்டால் மாடுகள் திருப்பி கொடுக்க மாட்டாது எனவும், மாட்டின் உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்து அனுப்பினர்.

# யானைகவுனி பகுதியில் செல்போனை திருடிய வழக்கில் 2 பேர் கைது

. சென்னை மே 26-

ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அஜய் சுமித், என்பவர் யானைகவுனி, ஆதியப்ப நாயக்கன் தெருவில் உள்ள ஒரு பேக்கரியில் மேலாளராக வேலை செய்து கொண்டு, அயனாவரத்தில் தங்கி வருகிறார். அஜய் சுமித் வேலை முடிய நேரமாகிவிட்டதால், 23.ந் தேதி அன்று இரவு பேக்கிரியிலேயே தூங்கியபோது, நேற்று முன் தினம் அதிகாலை, அருகில் பிளாட்பாரத்தில் வசித்து வரும் கார்த்திக் என்பவர் குடிக்க தண்ணீர் கேட்டதால், அவருக்கு தண்ணீர் கொடுத்துவிட்டு, விடியற்காலை எழுந்து பார்த்தபோது, அவரது விவோ செல்போன் திருடு போனது தெரியவந்தது. இது குறித்து அஜய் சுமித், யானைகவுனி காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

யானைகவுனி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி செல்போன் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.கார்த்திக் (எ) காந்தி, 2.விக்னேஷ் (எ) அப்பு, ஆகிய 2 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் விவோ செல்போன் மீட்கப்பட்டது.

வி சா ர ணை யில் கைது செய்யப்பட்ட எதிரி கார்த்திக் சம்பவத்தன்று புகார்தாரரிடம் தண்ணீர் கேட்பது போல நடித்து, அவரது செல்போனை திருடிச் சென்று, அவரது கூட்டாளி விக்னேஷ் என்பவரிடம் திருடிய செல்போனை கொடுத்துள்ளது தெரியவந்தது. மேலும் விசாரணையில் ஏற்கனவே எதிரிகள் கார்த்திக் மற்றும் விக்னேஷ் ஆகியோர் மீது தலா ஒரு குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் விற்ற வழக்கில் மேலும் இருவர் கைது

சென்னை மே 26-

சென்னை பெருநகர காவல், வேப்பேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் கடந்த மாதம் 20 ந் தேதி அன்று வேப்பேரி, பேரக்ஸ் சாலையிலுள்ள, ஒரு விடுதியின் அருகில் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த 1.பாலாஜி, 2.முகமது சுகைல் உசேன், 3.முகமது அகமதுல்லா, 4.முகமது யூசுப், 4 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 3.6 கிராம் எடை கொண்ட மெத்தம்பெட்டமைன், 3 செல்போன்கள் மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.வேப்பேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி மெத்தம்பெட்டமைன் வழக்கில் தொடர்புடைய 5.ஷியாம்குமார், , 6.இம்மானுவேல், ஆகிய இருவரை சூளை, ராகவேந்திரா பூங்கா அருகில் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1.20 கிராம் மெத்தம்பெட்டமைன் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரிகள் இருவரும் பெங்களூரிலிருந்து மேற்படி மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளை வாங்கி வந்தது தெரியவந்தது.

ஊட்டி அருகே

# கன மழையினால் மரக்கிளை விழுந்து கேரளாவைச் சேர்ந்த சுற்றுலா பயணி பலி: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அஞ்சலி



ஊட்டி, மே.26-

ஊட்டிருகே பலத்த காற்றுடன் பெய்து வரும் கன மழையினால் மரக்கிளை விழுந்து கேரளாவைச் சேர்ந்த சுற்றுலா பயணி ஆதிதேவ்(19) பலியானார். அவரது உடலுக்கு செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

தேன்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதையடுத்து

கோவை, நீலகிரியில் 24-ந் தேதி கனமழையும், 25 மற்றும் 26 ஆம் தேதி அதி கன மழை பெய்யும் என்றும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. கனமழை காரணமாக சிவப்பு எச்சரிக்கை ( ரெட்அலர்ட் ) விடுக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாவட்ட தீயணைப்புத்துறை, மின்சாரம், நெடுஞ்சாலைத்துறை என அனைத்து துறைகளும் தயார் நிலையில் இருக்கவும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்பு படையினர் நீலகிரி வந்தனர்.

இந்த நிலையில் வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்புக்கு ஏற்ப நேற்று முன்தினம் முதல் நீலகிரி மாவட்டத்தின் பல இடங்களிலும் கனமழை பெய்து வருகிறது. இந்த நிலையில் இரண்டாவது நாளாக நேற்று அதிகாலை முதலே பல இடங்களிலும் கனமழை காற்றுடன் வெளுத்து வாங்கியது.

நீலகிரி மாவட்டத்தில் குறிப்பாக கூடலூர், பந்தலூர் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக அவலாஞ்சியில் 213 மில்லி மீட்டர் மழை பதிவானது.

இந்த நிலையில் கேரளா மாநிலம் வடகரையை சேர்ந்த சுற்றுலா பயணிகள் கார் மூலம் ஊட்டி வந்தனர். நேற்று மதியம் ஒரு மணி அளவில் 8-வது மைல் அருகே வந்து வாகனத்தை நிறுத்தி இயற்கை காட்சிகளை படம் எடுத்துக் கொண்டிருந்தனர். அப்போது காற்றின் வேகத்தால் மரக்கிளை ஒன்று முறிந்து ஆதிதேவ் (19) என்பவரின் தலையில் விழுந்தது. இதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக அவரை ஊட்டி தீயணைப்பு துறையினர் மீட்டு ஊட்டி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர், ஆனால் போகும் வழியிலேயே அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

அதனையடுத்து அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த ஆதிதேவின் உடலுக்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் லலிதா, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா உள்ளிட்டோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி ஆதிதேவின் உடலை ஆம்பூலன்ஸ் வாகனம் மூலம் கேரளாவிற்கு அனுப்பி வைத்தனர்.

ஊட்டியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் ஆங்காங்கே மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது.

அதே நேரத்தில் மரங்கள் மின்கம்பங்கள் மீது விழுவதால் அடிக்கடி மின் தடை ஏற்பட்டு வருகிறது. தாழ்வான பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு கேரளா மாநிலம், கள்ளிக்கோட்டையைச் சேர்ந்த அருண் தாமஸ் மற்றும் ஆன்டோ தாமஸ் சகோதரர்கள் புது கார் ஒன்றை வாங்கி நீலகிரி மாவட்டம் கூடலூர் வந்தனர். கூடலூர் குண்டி பகுதியில் இருக்கும் தனது நண்பர் ராஜேஷ் உடன் இணைந்து தர்மகிரி வழியாக கூடலூர் வந்தனர். வரும் வழியில் காட்டு ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் நீரின் வேகத்தை பார்த்த வாகனத்தை அப்படியே நிறுத்திவிட்டனர். தொடர்ந்து வெள்ளத்தின் அளவு அதிகரித்ததால் அதிர்ச்சியடைந்த 3 பேரும் காரின் மீது ஏறி நின்று காப்பாற்றுமாறு சத்தம் போட்டனர் தகவல் அறிந்த பொதுமக்கள் கூடலூர் தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தனர். இரவு 12 மணியளவில் தீயணைப்பு நிலைய அதிகாரி சங்கர் தலைமையிலான தீயணைப்பு துறையினர் அங்கு சென்று கயிறை கட்டி அவர்களை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். பின்னர் அவர்களை முதலுதவி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் மீட்பு பணி அதிகாலை 6 மணி வரை நீடித்தது ஆற்றின் வெள்ளத்தில் சிக்கிய காரை தீயணைப்புத் துறையினர் எங்கும் நகர்ந்து விடாதபடி கயிறை இணைத்து ஒரு மரத்தில் கட்டி வைத்தனர் நேற்று காலை ஜேசிபி உதவியுடன் தீயணைப்புப் துறையினர் அந்தக் காரை மீட்டனர்.

இதற்கிடையே உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் சுற்றுலா பயணிகள் நீலகிரியில் இருந்தால் மாலை 4 மணிக்குள் தங்கும் இடங்களுக்கு செல்லுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதே போல் நீலகிரி மாவட்டத்தில் இன்றும் கனமழை இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில்

# தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம்

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது




ஊட்டி,மே.26-

நீலகிரி கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கண்காணிப்பு அலுவலர் துணிநூல் துறை இயக்குநர் லலிதா மற்றும் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது

தென்மேற்கு பருவமழையையொட்டி, நீலகிரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, கூடலூர், பந்தலூர், உதகை, குந்தா உள்ளிட்ட இடங்களிலுள்ள அபாயகரமான பகுதிகளை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இரவு நேரங்களிலும் கண்காணிப்பு பணிகளை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். மழை பொழிவு அதிகமாக இருக்கும் பட்சத்தில் உடனடியாக பொதுமக்களை அருகிலுள்ள நிவாரண முகாம்களில் தங்க வைத்து, அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்க வேண்டும். மாவட்டத்திலுள்ள அணைகளின் நீர் இருப்பினை கண்காணிக்க வேண்டும். பேரிடர் இடர்பாடுகள் தொடர்பான புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பருவமழை பாதிப்புகளை சீர் செய்யும் வகையில் ஜே.சி.பி வாகனங்கள் மற்றும் மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். வரும் நாட்களில் அதிகன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில், அனைத்து துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்றைய தினம் தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. நாளை மற்றும் நாளை மறுநாள் அதிகனமழை பெய்ய இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில், அனைத்துத்துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. கலெக்டர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி 1077 மற்றும் 0423 - 2450034

மற்றும் 2450035 ஆகிய எண்களிலும், 94887 00588 வாட்ஸ் அப் எண்ணிலும் தெரிவிக்கலாம். மாவட்;டத்தில், 283 இடங்கள் அபாயகரமான பகுதிகளாக கண்டறியப்பட்டு, அதனை கண்காணிக்க அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய

42 மண்டல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து வட்டங்களுக்கும் துணை ஆட்சியர் நிலையிலான கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் 456 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் 3,500 முதல்நிலை பொறுப்பாளர்கள் மற்றும் 197 பேரிடர் கால நண்பர்கள் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு, தயார் நிலையில் உள்ளனர். தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினர் 80 நபர்கள் வரவழைக்கப்பட்டு, குந்தா தாலுக்கா மற்றும் கூடலூர் தாலுக்காவிற்கு தலா 25 நபர்களும், உதகை தாலுக்காவிற்கு மீதமுள்ள 30 நபர்களும் அனுப்பப்பட்டு தயார் நிலையில் உள்ளனர். அதேபோல், தேசிய மீட்பு படையினர் 30 நபர்கள் வரவழைக்கப்பட்டு, தயார் நிலையில் உள்ளனர். அதேபோல், மழை மற்றும் காற்றின் காரணமாக சாலைகளில் விழும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்தும் வகையில் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தேவையான உபகரணங்களுடன் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இயற்கை பேரிடர்கள் ஏற்பட வாய்ப்புள்ள அனைத்து பகுதிகளையும் தொடர்ந்து கண்காணிக்கவும், தேவைப்படும் பட்சத்தில் அவர்களை பாதுகாப்பாக நிவாரண முகாம்களில் தங்க வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை மாவட்டத்தில் மழையின் காரணமாக 16 இடங்களில் மரங்கள் விழுந்து, அவை அப்புறப்படுத்தப்பட்டு, போக்குவரத்து சீர் செய்யப்பட்டுள்ளது. மழையின் காரணமாக 3 வீடுகள் பகுதி சேதமடைந்துள்ளது.

மேலும், நாளை மற்றும் நாளை மறுநாள் ஆகிய இரண்டு நாட்கள் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களான பால், காய்கறிகளை உள்ளிட்ட பொருட்களை கூடுதலாக வைத்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும். அதேபோல், மாவட்டத்திலுள்ள சுற்றுலாப் பயணிகள் மாலை 4 மணிக்குள் தாங்கள் தங்கியுள்ள விடுதிகளுக்கு திரும்பி செல்லும் வகையில், திட்டமிட்டு பயணம் செய்தால் பாதுகாப்பாகவும், சிறப்பாகவும் இருக்கும். இதுகுறித்து, மாவட்டத்திலுள்ள சோதனைச் சாவடிகளில் ஒலிபெருக்கி மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சித்துறை மூலமும் இப்பணிகளைமேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பணிகள் நாளை காலை 10 மணி முதல் தொடங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ள தொடர்ந்து அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின்படி, மாவட்ட நிர்வாகம் சிறப்பாக மேற்கொண்டுள்ளதால், பொதுமக்கள் எவ்வித அச்சமும் அடைய தேவையில்லை என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா , கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் , மாவட்ட வன அலுவலர் (நீலகிரி வனக்கோட்டம்) கௌதம்., மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் பொதுமக்களை தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிவாரண முகாம்கள்

## மாவட்ட கண்காணிப்பு அலுவலர் லலிதா நேரில் ஆய்வு



ஊட்டி, மே.26-

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்களை தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஊட்டி ஊராட்சி ஒன்றியம், தும்மனட்டி ஊராட்சிக்குட்பட்ட, ரங்கநாதபுரம், காந்திநகர் ஆகிய பகுதிகளில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் துணிநூல் துறை இயக்குநர் லலிதா, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், நேற்று (25.05.2025) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, கண்காணிப்பு அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ஆகியோர், ஊட்டி நகராட்சிக்குட்பட்ட ராயல்கேசில் மற்றும் கோடப்பமந்து ஆகிய அபாயகரமான பகுதிகளை நேரில் பார்வையிட்டு, அப்பகுதிகளை தொடர்ந்து கண்காணிக்குமாறு துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.அதனைத் தொடர்ந்து, ஊட்டி ஊராட்சி ஒன்றியம் தும்மனட்டி ஊராட்சிக்குட்பட்ட, ரங்கநாதபுரம், காந்திநகர் ஆகிய பகுதிகளை நேரில் பார்வையிட்டு, அப்பகுதி மக்களிடம் கலந்துரையாடி, அவசியம் ஏற்படும்பட்சத்தில், அருகிலுள்ள நிவாரண முகாம்களுக்கு சென்று தங்கி கொள்ளுமாறு அறிவுறுத்தினார். மேலும், பேரிடர் கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதிகளில், மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்குமாறு துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை பெய்து வருவதை முன்னிட்டு, குந்தா சுற்றுவட்டாரப் பகுதிகளான அப்பர்பவானி, அவலாஞ்சி, எமரால்டு ஆகிய பகுதிகளில் மழை பொழிவு உள்ளது. எனவே சுற்றுலாப் பயணிகள் குந்தா சுற்றுவட்டாரப் பகுதிக்கு வருகைப்புரிவதை தவிர்க்க வேண்டும். மேலும், பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மரங்கள் அதிகமுள்ள பகுதிகளுக்கும், நீர்நிலைகளுக்கு அருகில் செல்லவோ வேண்டாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்றார்.

ஆய்வுகளின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், நகராட்சிப் பொறியாளர் சேகரன், வட்டாட்சியர் சங்கர்கணேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர் ஸ்ரீதரன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# நடிகர் கார்த்தி பிறந்தநாள்: ஈரோட்டில் ரசிகர்கள் அன்னதானம் வழங்கி கொண்டாட்டம்



ஈரோடு மே 26-

நடிகர் கார்த்தியின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்று ஈரோட்டில் ஈரோடு மாவட்ட தலைமை புரட்சிவீரன் கார்த்தி மக்கள் நல மன்றம் சார்பில் தலைவர் எம் கே மாதேஸ்வரன் தலைமையில் இரத்ததான வழங்கும் நிகழ்ச்சி ஈரோடு அரசு மருத்துவமனையில் நடைபெற்றது செயலாளர் டி ஆர் தினகரன் முன்னிலை வகித்தார் எம் துர்கா மாதேஸ்வரன் வரவேற்றார் இதில் 25க்கும் மேற்பட்ட ரசிகர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர் தொடர்ந்து திண்டல் அரிமா பள்ளியில் அமைந்துள்ள செவித்திறன் குறைவுடைய குழந்தைகளுக்கான ஆரம்ப பயிற்சி மையத்தில் மதியம் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் விருதுநகர் பிரசாத் பருத்திவீரன் லுக் கார்த்திக் குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு குழந்தைகளுக்கு உணவுகளை வழங்கினர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# நீலகிரியில் பலத்த காற்றுடன் விடாது பெய்து வரும் கனமழை: கேத்தி அருகே மரம் விழுந்து போக்குவரத்து பாதிப்பு



ஊட்டி, மே.26-

நீலகிரி மாவட்டத்தில் பலத்த காற்றுடன் விடாது பெய்து வரும் கன மழையின் காரணமாக கேத்தி ஆரம்ப சுகாதார நிலையம் அருகே சாலையில்; ராட்சத மரம்; விழுந்து போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

நீலகிரி மாவட்டத்திற்கு நேற்றும், இன்றும் ரெட் அலர்ட் விடப்பட்டுள்ளது. அதன் காரணமாக பலத்த காற்றுடன் விடாது மழைபெய்து வருகிறது. காற்றுடன் கூடிய மழையின் காரணமாக நேற்று ஆங்காங்கே சாலைகளில் மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. அந்த இடங்களில் தீயணைப்புத்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறையினர் மரங்களை வெட்டி, ஜேசிபி இயந்திரங்கள் மூலம் மரங்களை ஒதுக்கி சாலை போக்குவரத்தை சீரமைத்தனர்.

இந்த நிலையில் குன்னூர் வட்டம், கேத்தி ஆரம்ப சுகாதார நிலையம் அருகே எல்லநள்ளி -பாலாடா சாலையில் ராட்சத மரம் விழுந்து போக்குவரத்து பாரிக்கப்பட்டது. தகவலறிந்து உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு மற்றும் நெடுஞ்சாலைத்துறையினர் சாலையின் குறுக்கே விழுந்த மரத்தை மரஅறுவை இயந்திரங்கள் மூலம் வெட்டி அகற்றினர். பின்னர் ஜேசிபி இயந்திரம் மூலம் மரங்கள் அகற்றப்பட்டு போக்குவரத்து துவங்கியது.இதேபோல் வெலிங்டனில் ராணுவகல்லூரியிலிருந்து இருந்து கம்பிசோலை செல்லும் சாலையில் கற்பூர மரம் விழுந்தது. தகவலின்பேரில் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத்துறையினர் மரங்களை வெட்டி அப்புறுப்படுத்தினர். இந்த நிலையில் தொடர்ந்து பலத்த காற்றுடன் பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை கருதி நீலகிரி மாவட்டம் ஊட்டியிலுள்ள அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, தொட்டபெட்டா, படகு இல்லம், பைக்காரா படகு இல்லம், பைக்காரா பால்ஸ், பைன்பாரஸ்ட், 9-வது மைல் சூட்டிங்மட்டம், அவலாஞ்சி, ஊசிமலை, லேம்ஸ்ராக் உள்ளிட்ட அனைத்து சுற்றுலாத்தலங்களும் இன்று(26-ந் தேதி) ஒரு நாள் தற்காலிகமாக மூடப்படுகிறது.

# முதல்வர் மருந்தகங்களில் கூடுதல் பதிவாளர் பிருந்தா ஆய்வு



ஊட்டி, மே.26-

நீலகிரி மாவட்டத்தில் உள்ள முதல்வர் மருந்தகங்களில் கூடுதல் பதிவாளர் பிருந்தா ஆய்வு மேற்கொண்டார்.

கூட்டுறவு நகர வங்கிக் கூட்டமைப்பின் மேலாண்மை இயக்குநர்கூடுதல் பதிவாளர் பிருந்தா 24-ந் தேதி மேட்டுப்பாளையத்தில் உள்ள இந்தியாவின் முன்னோடி கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ஒன்றான நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தின் என்சிஎம்எஸ் உருளைக்கிழங்கு ஏலமையத்தைப் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் குன்னூர் வந்த இரயில்வே பணியாளர்கள் கூட்டுறவு பண்டகம், ,சாந்தூரில் செயல்படும் தனிநபர் தொழில்முனோவோரால் நடத்தப்படும் முதல்வர் மருந்தகம் மற்றும் கம்பையாடாவில்,சேலாசில் அமைந்துள்ள முதல்வர் மருந்தங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு நியாய விலைக் கடைகளையும் ஆய்வு செய்தார். தற்போது புதிதாக, நியாய விலைக் கடைகளில் எலெக்ட்ரானிக் தராசை, பிஓஎஸ் மெஷினுடன் புளூடூத் மூலம் இணைத்து, பில் போடும் புதிய நடைமுறை அமலுக்கு வந்துள்ளது.

அதில் உள்ள நிறை குறைகளை விற்பனையாளர்களிடையே கேட்டறிந்தார். மேலும் முதல்வர் மருந்தகங்களில் எவ்வாறு விற்பனையை பெருக்குவது மற்றும் வாடிக்கையாளரிடையேயான நல்லுறவை எவ்வாறு மேம்படுத்துவது என ஆலோசனைகளை வழங்கினார்.

ஆய்வின் போது கூட்டுறவுச் சங்கங்களின் நீலகிரி மண்டல இணைப்பதிவாளர் இரா. தயாளன், நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்க மேலாண்மை இயக்குநர் தா.முத்துக்குமார், கூட்டுறவு சார்பதிவாளர்கள் கார்த்திகேயன், நிசார், கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# ஈரோட்டில் பெரும்பிடுகு முத்தரையர் சதய விழா



ஈரோடு மே 26-

ஈரோட்டில் நேற்று. பேரரசர் பெரும் பிடுகு முத்திரையர்1350வது சதய விழா மற்றும் 2025-ல் 12 ஆம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து முத்தரையர் இன மாணவ மாணவிகளுக்கு ஊக்கப் பரிசு வழங்கும் விழா மாவட்டத் தலைவர் இராஜசேகர் தலைமையில் நடைபெற்றது செயலாளர் செல்வ விநாயகம் வரவேற்றார். முன்னதாகபேரரசர் பெரும் பிடுகு முத்திரையர் திருஉருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது விழாவில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி சி சந்திரகுமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார் தொடர்ந்து 40 மாணவ மாணவிகளுக்கு ஊக்க பரிசுகள் மற்றும் ஷீல்டுகள் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது விழாவின் முடிவில் பொருளாளர் பி ஜெயராமன் நன்றி கூறினார் விழாவில் மாவட்ட நகர பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்

### கடைசி லீக்கில் குஜராத்தை வீழ்த்தி

# ஐ.பி.எல். தொடரை சி.எஸ்.கே. வெற்றியுடன் நிறைவு செய்தது

**அகமதாபாத், மே 26-**

குஜராத் டைட்டன்ஸுக்கு எதிரான போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் 83 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று நடப்பு ஐ.பி.எல். தொடரை நிறைவு செய்துள்ளது.



**பிரேவிஸ், கான்வே அசத்தல்...**

ஐ.பி.எல். தொடரில் அகமதாபாதில் நடைபெற்ற நேற்றையப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் பேட்டிங்கைத் தேர்வு செய்து முதலில் விளையாடியது. முதலில் விளையாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 230 ரன்கள் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ஆயுஷ் மாத்ரே மற்றும் டெவான் கான்வே அணிக்கு சிறப்பான தொடக்கத்தைத் தந்தனர். அர்ஷத் கான் வீசிய ஆட்டத்தின் இரண்டாவது ஓவரில் ஆயுஷ் மாத்ரே 28 ரன்கள் விளாசி அசத்தினார். இருப்பினும், அவர் 17 பந்துகளில் 34 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 3 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் அடங்கும். இதனையடுத்து, டெவான் கான்வேவுடன் உர்வில் படேல் ஜோடி சேர்ந்தார்.

**உர்வில் படேல் அதிரடி...**

இந்த இணை அதிரடியைத் தொடர்ந்தது. அதிரடியாக விளையாடிய உர்வில் படேல் 19 பந்துகளில் 37 ரன்கள் எடுத்து சாய் கிஷோர் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதில் 4 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கும். ஷிவம் துபே 8 பந்துகளில் 17 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 2 சிக்ஸர்கள் அடங்கும். அதன் பின், கான்வே மற்றும் டிவால்ட் பிரேவிஸ் ஜோடி சேர்ந்தனர். பிரேவிஸ் களமிறங்கியது முதலே அதிரடியில் மிரட்டினார். அவ்வப்போது பவுண்டரிகளை விரட்டி விளையாடிய டெவான் கான்வே 35 பந்துகளில் 52 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 6 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கும்.

**231 ரன்கள் இலக்கு...**

மறுமுனையில் அதிரடியில் மிரட்டிய டிவால்ட் பிரேவிஸும் அரைசதம் கடந்து அசத்தினார். அவர் 23 பந்துகளில் 57 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 4 பவுண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்கள் அடங்கும். ஜடேஜா 18 பந்துகளில் 21 ரன்கள் எடுத்து களத்தில் இருந்தார். இறுதியில் சென்னை அணி 230 ரன்கள் எடுத்தது. குஜராத் டைட்டன்ஸ் தரப்பில் பிரசித் கிருஷ்ணா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். சாய் கிஷோர், ரஷித் கான் மற்றும் ஷாருக்கான் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

**சி.எஸ்.கே. அபார வெற்றி...**

231 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய குஜராத் டைட்டன்ஸ் அணி 18.3 ஓவர்களில் 147 ரன்களில் ஆட்டமிழந்தது. இதன் மூலம், சென்னை சூப்பர் கிங்ஸ் 83 ரன்கள் வித்தியாசத்தில் குஜராத் டைட்டன்ஸை வீழ்த்தி நடப்பு ஐ.பி.எல். தொடரை வெற்றியுடன் நிறைவு செய்தது.

## ரேஷன் கடைகளில் பில் போடும் இயந்திரத்துடன் மின்தராசு இணைப்பு

**சென்னை, மே 26-**

ரேஷன் கடைகளில் பில் போடும் இயந்திரத்துடன் மின் தராசு இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ரேஷன் கடைகளில் அரிசி, பருப்பு. சர்க்கரை உள்ளிட்ட பொருட்கள் ரேஷன் அட்டை மூலமாக வழங்கப்படுகிறது. ரேஷன் அட்டையை பொருத்து பொருட்கள் வழங்கப்படும் வீதமும், அளவும் மாறுபடும். இதனிடையே, ரேஷன் பொருட்கள் எடை குறைவாக வழங்கப்படுவதாக தொடர்ந்து குற்றச்சாட்டுகள் எழுந்து வந்தன.

இதனை தடுக்கும் வகையில் ரேஷன் கடைகளில் பில் போடும் இயந்திரத்துடன் மின்தராசு இணைக்கப்பட்டுள்ளது. அந்த எலக்ட்ரானிக் பில்லிங் கருவியில் ரேஷன் அட்டைதாரர்கள் கைரேகை வைத்தால் மட்டுமே ரசீது வரும். அதாவது இனி பொருட்கள் எடை எந்தளவுக்கு வைக்கப்படுகிறதோ, அந்த அளவுக்குதான் பில்லும் வரும். இதனால் ரேஷன் கடை ஊழியர்கள் சரியான எடைக்கு பொருட்களை வைத்தே ஆக வேண்டும்.

## வெள்ளியங்கிரி மலை ஏற பக்தர்களுக்கு தடை

**கோவை,மே 26-**

கோவையில் அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளதால் வெள்ளியங்கிரி மலையில் ஏற பக்தர்களுக்குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோவை, நீலகிரி மாவட்டங்களில் சென்னை வானிலை மையம் ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுத்து உள்ளது. அந்த வகையில் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த 3 நாட்களாக மழை பெய்து வருகிறது. மேற்குதொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் பலத்த மழை கொட்டுகிறது.

இந்நிலையில், கோவையில் அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளதால் வெள்ளியங்கிரி மலையில் ஏற பக்தர்களுக்குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது. மறு அறிவிப்பு வரும் வரை வெள்ளியங்கிரி மலையேற பக்தர்களுக்கு வனத்துறை தடை விதித்துள்ளது. மலைப்பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால் பக்தர்களின் பாதுகாப்பு கருதி நடவடிக்கை என வனத்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். மேலும், பரளிக்காடு, பூச்சமரத்தூர் சூழல் சுற்றுலா தலங்களுக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# தேனீக்கள் பாதுகாப்பு நம் வருங்காலத்தின் பாதுகாப்பு

### பிரதமர் நரந்திரமோடி பேச்சு

**புதுடெல்லி, மே 26-**

தேனீக்களை பாதுகாப்பது என்பது நம்முடைய வேளாண்மை மற்றும் வருங்கால தலைமுறையினரையும் பாதுகாக்கும் விசயம் ஆகும் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

பிரதமர் மோடி வானொலியில் மாதந்தோறும் கடைசி ஞாயிற்று கிழமையில் மக்களுக்கு உரையாற்றும் மன் கி பாத்தின் 122-வது நிகழ்ச்சியில் நேற்று பங்கேற்று பேசினார். அப்போது அவர், நகர்ப்புற பகுதிகளில் தேன் கூடுகளை நீக்கும்போது, அதனை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் இளைஞர் ஒருவருக்கு தோன்றி அதற்கான முயற்சியில் ஈடுபட்டார் என சுட்டிக்காட்டி பேசினார்.

அவர் பேசும்போது, தேனீக்களை பாதுகாப்பது என்பது சுற்றுச்சூழலை பாதுகாப்பது என்று மட்டுமில்லாமல், நம்முடைய வேளாண்மை மற்றும் வருங்கால தலைமுறையினரையும் பாதுகாக்கும் விசயம் ஆகும். அதற்கான எடுத்துக்காட்டு ஒன்றை நான் கூறுகிறேன். புனே நகரை சேர்ந்த அமித் என்ற இளைஞர் வசித்து வந்த வீட்டு வசதி குடியிருப்பில் இருந்த தேன்கூட்டை சிலர் நீக்கியுள்ளனர்.

அப்போது, அதனை நீக்க கூடாது. தேன்கூட்டை பாதுகாக்க வேண்டும் என அமித் நினைத்துள்ளார். பின்னர் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். தேனீக்களை பற்றிய ஆய்வில் ஈடுபட்டு, தேனீக்களின் நண்பர்கள் என்ற குழு ஒன்றை உருவாக்கினார். இந்த குழுவினர், தேன் கூடுகளை ஓரிடத்தில் இருந்து பாதுகாப்பாக வேறு இடத்திற்கு மாற்றும் பணியை செய்து வருகின்றனர்.

இதனால், மக்களுக்கும் ஆபத்து இல்லை. தேனீக்களும் உயிருடன் பாதுகாக்கப்படுகின்றன என பிரதமர் பேசியுள்ளார். மே 20-ந்தேதி உலக தேனீக்கள் தினம் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், அதனை குறிப்பிட்டு பிரதமர் மோடி பேசினார்.

அவர் கூறும்போது, இந்தியாவில் 10, 11 ஆண்டுகளுக்கு முன் ஆண்டுக்கு 75 ஆயிரம் டன் என்ற அளவிலேயே தேன் உற்பத்தி நடைபெற்றது. ஆனால், இன்றோ 1.25 லட்சம் டன் தேன் உற்பத்தி நடைபெறுகிறது. இது 60 சதவீதம் அதிகம் ஆகும் என்று பேசியுள்ளார்.

# திருநங்கைகளுக்கான தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள்: அரசு விளக்கம்

**சென்னை, மே 26-**

திருநங்கைகள் தொடங்கும் தொழிலின் தேவைக்கேற்ப ரூ.50,000/- வரை மானியம், உயர்கல்வி பயில விரும்பும் திருநங்கைகளுக்கு இலவச கல்வி உட்பட பல்வேறு நலத்திட்டங்கள் அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, திருநங்கையர்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு திருநங்கையர் நல வாரியம்: முன்னாள் முதல்வர் கருணாநிதி, அரவாணிகளின் நலனை உறுதி செய்வதற்காக, 15.4.2008 அன்று "தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம்" தொடங்கினார். அத்துடன் அரவாணிகள் என்னும் பெயரை திருநங்கையர் எனவும் மாற்றி அறிவித்தார். அதன் பிறகு அரவாணிகள் நலவாரியம் திருநங்கையர் நலவாரியம் என வழங்கப்படுகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் திருநங்கையர் நலவாரியத்தினை 15 அலுவல்சார் உறுப்பினர்கள் , 13 (10 திருநங்கைகள், 1 திருநம்பி, 1 இடைபாலினர் மேலும் 1 பெண் உறுப்பினர்) அலுவல் சாரா உறுப்பினர்களுடன் 2025-ஆம் ஆண்டில் திருத்தியமைத்தார். திருநங்கைகள் நல வாரியத்தின் வாயிலாக அடையாள அட்டை, குடும்ப அட்டை, வீட்டு மனைப்பட்டா, சொந்த தொழில் தொடங்கிட மானியம் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருநங்கைகளுக்கான ஓய்வூதியம்: வாழ்வாதாரச் செலவுகளுக்கு வருமானம் ஈட்ட இயலாத 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற ஏழ்மை நிலையிலுள்ள திருநங்கைகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்தது. அந்த ஓய்வூதியத் தொகையினை முதல்வர் மு.க.ஸ்டாலின் ரூ.1,500/- ஆக உயர்த்தி உத்தரவிட்டார்.

திருநங்கைகளுக்கான சிறப்பு விருது: முதல்வர் மு.க. ஸ்டாலின், திருநங்கைகளை ஊக்கப்படுத்தும் வகையில் சிறப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கி அறிவித்தார். அதன்படி, தங்கள் சொந்த முயற்சியில் படித்து, தனித் திறமை கொண்டு பல்வேறு துறைகளில் முன்னேறி திருநங்கைகளின் நலனிற்காக சிறப்பான முறையில் சேவை புரிந்து, அவர்களுள் முன்மாதிரியாகத் திகழும் திருநங்கை ஒருவருக்கு ஒவ்வொரு ஆண்டும் திருநங்கைகள் தினமான ஏப்ரல் 15-ஆம் நாளன்று "திருநங்கைகளுக்கான சிறப்பு விருது" ரூ.1,00,000/-க்கான காசோலை மற்றும் சான்றிதழுடன் வழங்க உத்தரவிட்டார்.

சுயதொழில் மானியம்: முதல்வர் மு.க.ஸ்டாலின், திருநங்கைகளின் வாழ்வாதாரத்தைப் பொருளாதார ரீதியாக உயர்த்தி, சமுகத்தில் அவர்களுக்கு அங்கீகாரத்தினை வழங்கும் நோக்கத்துடன், அவர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க மானிய வழங்கும் திட்டத்தினை உருவாக்கினார்கள். அதன் மூலம் அவர்கள் தொடங்கும் தொழிலின் தேவைக்கேற்ப ரூ.50,000/- வரை மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இது வரை 811 திருநங்கைகள் சுய தொழில் மானியம் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

திருநங்கைகளுக்கான கல்விக் கனவு திட்டம்: முதல்வர் மு.க. ஸ்டாலின், திருநங்கைகளும் மற்றவர்களைப் போன்றே சமமாக உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை உறுதி செய்யும் விதமாக 2024-2025-ஆம் நிதியாண்டு முதல் உயர் கல்வி பயில விரும்பும் திருநங்கைகளுக்கான கல்விக்கட்டணம், விடுதிக்கட்டணம் உட்பட அனைத்துச் செலவினங்களையும் வாரியத்தின் மூலம் வழங்கிட உத்தரவிட்டார். இத்திட்டத்திற்கென 2024-2025-ஆம் நிதியாண்டிற்கு ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 4 திருநங்கைகளுக்கு கல்விக் கட்டணத் தொகை திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் செலுத்தப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### டெஸ்ட் கிரிக்கெட் தொடர்:

# இங்கி., புறப்பட்டது இந்தியா 'ஏ' அணி

**புதுடெல்லி, மே 26-**

அபிமன்யூ ஈஸ்வரன் தலைமையிலான இந்தியா ஏ அணி இங்கிலாந்து புறப்பட்டது.



**முக்கியத்துவம்...**

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வருகிற ஜூன் 20-ம் தேதி தொடங்க உள்ளது. 2025-2027 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் அங்கமாக நடைபெறும் இந்த தொடரில் வெற்றி பெற இரு அணிகளும் கடுமையாக போராடும் என்பதால் இந்த தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

**புறப்பட்டது...**

இந்த தொடருக்கு முன்னதாக இந்திய 'ஏ' அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இங்கிலாந்து லயன்சுக்கு எதிராக 2 டெஸ்ட் (4 நாட்கள்) போட்டிகளிலும், இந்திய அணிக்கெதிராக ஒரு போட்டியிலும் விளையாட உள்ளது. இந்த தொடர் மே 30-ம் தேதி தொடங்க உள்ளது. இந்த தொடருக்கான இந்திய 'ஏ' அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் அபிமன்யூ ஈஸ்வரன் தலைமையிலான இந்தியா ஏ அணி இங்கிலாந்து புறப்பட்டது.

**வீரர்கள் விபரம்...**

அபிமன்யு ஈஸ்வரன் (கேப்டன்), யஷஸ்வி ஜெய்ஸ்வால், கருண் நாயர், துருவ் ஜூரல் (துணை கேப்டன்) (வி.கீப்பர்), நிதிஷ் குமார் ரெட்டி, ஷர்துல் தாக்குர், இஷான் கிஷன் (வி.கீப்பர்), மானவ் சுதர், தனுஷ் கோட்டியன், முகேஷ் குமார், ஆகாஷ் தீப், ஹர்ஷித் காம்போஜ், அன்ஷ் கம்புஜ், அன்ஷ் கம்புஜ் கெய்க்வாட், சர்பராஸ் கான், துஷார் தேஷ்பாண்டே, ஹர்ஷ் துபே.

## தவறுகளை ஏற்க முடியாது: ப்ரீத்தி ஜிந்தா

நடப்பு ஐ.பி.எல். சீசனின் 66-வது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணியை 6 விக்கெட்டுகளில் வீழ்த்தியது டெல்லி கேப்பிடல்ஸ் அணி. இந்த ஆட்டத்தில் பஞ்சாப் அணி பேட் செய்தபோது டிவி நடுவர் சிக்ஸர் கொடுக்க மறுத்தது குறித்து தனது கருத்தை பஞ்சாப் அணியின் உரிமையாளரும் நடிகையுமான ப்ரீத்தி ஜிந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் ட்வீட் செய்துள்ள அவர், "ஐ.பி.எல். மாதிரியான கிரிக்கெட் தொடரில் ஏராளமான தொழில்நுட்ப வசதிகள் நடுவர்களின் வசம் இருந்தும், இது மாதிரியான தவறுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இது நடக்கக் கூடாது. ஆட்டத்துக்கு பிறகு கருண் நாயரிடம் பேசினேன். அது சிக்ஸர் தான் என அவர் உறுதியாக தெரிவித்தார்" என தெரிவித்துள்ளார்.

## ஆர்.சி.பி அணியில் இணைந்த ஹேசில்வுட்

10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இறுதி கட்டத்தை எட்டி விட்டது. குஜராத் டைட்டன்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு , பஞ்சாப் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் ஆகிய அணிகள் இறுதிப்போட்டிக்கு முந்தைய 'பிளே-ஆப்' சுற்றுக்கு முன்னேறி இருக்கின்றன.

தோள்பட்டை வலியால் அவதிப்பட்டு வந்த ஆர்.சி.பி. அணியின் முக்கிய வீரரான ஜோஷ் ஹேசில்வுட் சில போட்டிகளில் விளையாடாமல் இருந்து வந்தார். இந்நிலையில், காயத்தில் இருந்து குணமடைந்த ஹேசில்வுட் மீண்டும் பெங்களூரு அணியில் இருந்துள்ளார். இது தொடர்பான விடியோவை பெங்களூரு அணி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

## ராமர் கோவிலில் விராட் கோலி - அனுஷ்கா

உலகின் தலைசிறந்த பேட்ஸ்மேனான இந்திய வீரர் விராட் கோலி சமீபத்தில் டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார். ஐ.பி.எல். போட்டியில் பெங்களூரு அணிக்காக விளையாடி வரும் விராட் கோலி நேற்று மனைவி அனுஷ்கா சர்மாவுடன் உத்தரபிரதேசம் மாநிலம் அயோத்தியில் உள்ள ராமர் கோவிலில் சாமி தரிசனம் செய்தார்.

இதேபோல அனுமர் கோவிலிலும் பிரார்த்தனையில் ஈடுபட்டார். அப்போது விராட்கோலி நிருபர்கள் சந்திப்பை தவிர்த்தார்.

## ஜிம்பாப்வே டெஸ்ட்: இங்கி., வெற்றி



இங்கிலாந்து மற்றும் ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி மே 22-ம் தேதி நாட்டிங்ஹமில் தொடங்கியது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகளை இழந்து 565 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. ஜிம்பாப்வே அணி முதல் இன்னிங்ஸில் 265 ரன்களுக்கு ஆட்டமிழந்து பாலோ ஆன் ஆனது.

பாலோ ஆன் ஆனதைத் தொடர்ந்து, ஜிம்பாப்வே அணி அதன் இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடியது. சோயப் பஷீரின் அபார பந்துவீச்சினால், ஜிம்பாப்வே அணி 255 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் மூலம், இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 45 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது

## சென்னை அணிக்கு ரெய்னா ஆதரவு

நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு சிறப்பாக அமையவில்லை. 13 ஆட்டங்களில் விளையாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் 3 வெற்றி, 10 தோல்விகளுடன் புள்ளி பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது. இந்நிலையில், நடப்பு ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் நேற்று தனது கடைசி ஆட்டத்தில் குஜராத் அணியை எதிர்கொண்டு விளையாடியது. இதில் சென்னை அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சுரேஷ் ரெய்னா தொலைக்காட்சி வர்ணனையாளராக செயல்பட்டு வந்தார்.

அப்போது, நடப்பு ஐ.பி.எல் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் மோசமான ஆட்டம் குறித்து சக வர்ணனையாளர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த ரெய்னா, கழுகுகள் 4 நாட்கள் பறக்கவில்லை என்பதற்காக வானம் புறாக்களுக்கு சொந்தமாகிவிட முடியாது' என்று அதிரடியாக கூறினார்.

# 100-வது பட்டம் வென்று ஜோகோவிச் புதிய சாதனை

**ஜெனீவா, மே 26-**

38 வயதான செர்பியாவை சேர்ந்த டென்னிஸ் வீரர் ஜோகோவிச், ஒற்றையர் ஆடவர் பிரிவில் தனது 100-வது பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

**100-வது பட்டம்...**

சனிக்கிழமை அன்று ஜெனீவாவில் நடைபெற்ற ஜெனீவா ஓபன் இறுதிப் போட்டியில் ஹூபர்ட் ஹர்காக்ஸை 5-7, 7-6(2), 7-6(2) என்ற செட் கணக்கில் வீழ்த்தி, தனது 100-வது பட்டத்தை ஜோகோவிச் வென்றார். சுமார் மூன்று மணி நேரம் ஐந்து நிமிடங்கள் இந்த ஆட்டம் களிமண் தரையில் நடைபெற்றது. இதற்கு முன்னர் ரோஜர் ஃபெடரர் மற்றும் ஜிம்மி கான்னர்ஸ் ஆகியோர் தான் 100+ பட்டங்களை ஒற்றையர் பிரிவில் வென்றுள்ளனர். தற்போது அந்த வரிசையில் ஜோகோவிச் 3-வது வீரராக இணைந்துள்ளார்.

**ஒலிம்பிக்கில் தங்கம்...**

24 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றுள்ள ஜோகோவிச், கடைசியாக பாரிஸ் ஒலிம்பிக்கில் கடந்த ஆண்டு தங்கம் வென்றிருந்தார். அதன் பின்னர் அவர் பட்டம் வெல்லவில்லை. மியாமி மாஸ்டர்ஸ் மற்றும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் தொடரின் இறுதிப் போட்டியில் அவர் தோல்வியை தழுவி இருந்தார்.

**பிரெஞ்சு ஓபன்...**

100-வது முறையாக பட்டம் வெல்வது எண்ணி தான் பெருமை கொள்வதாக ஜோகோவிச் தெரிவித்தார். அதற்காக தான் பயிற்சி மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். மூன்று முறை பிரெஞ்சு ஓபன் பட்டம் வென்றுள்ள அவர், இந்த முறையும் அதில் பங்கேற்கும் வகையில் பாரிஸ் சென்றுள்ளார். பிரெஞ்சு ஓபன் 2025 தொடரில் அமெரிக்க வீரர் உடன் திங்கட்கிழமை அன்று முதல் சுற்று ஆட்டத்தில் அவர் விளையாடுகிறார்.

# மகளிர் ஹாக்கி: இந்தியா வெற்றி

**புதுடெல்லி, மே 26-**

4 நாடுகள் மகளிர் ஆக்கி தொடரில் சிலியை 2-1 புள்ளி கணக்கில் வீழ்த்தி இந்திய அணி வெற்றி பெற்றது.

**மகளிர் உலக கோப்பை...**

ஜூனியர் மகளிர் உலக கோப்பைக்கான ஆக்கி போட்டிகள் வருகிற டிசம்பர் மாதத்தில் நடைபெற உள்ளன. இதற்கு தயாராகும் வகையில், இந்திய மகளிர் அணி, 4 நாடுகளுக்கான ஆக்கி போட்டி தொடரில் விளையாடுகிறது. அர்ஜென்டினா, உருகுவே, சிலி மற்றும் இந்தியா ஆகிய 4 நாடுகள் பங்கேற்கும் இந்த போட்டி தொடர் நேற்று தொடங்கி ஜூன் 2-ந்தேதி வரை நடைபெறும்.

**சிலி முன்னிலை...**

இந்நிலையில், அர்ஜென்டினாவின் ரொசாரியோ நகரில் நடந்த போட்டி ஒன்றில், இந்தியா மற்றும் சிலி நாடுகளை சேர்ந்த அணிகள் விளையாடின. இதில், போட்டியின் 20-வது நிமிடத்தில் கோல் அடித்து, வீராங்கனை ஜாவேரியா சாயின்ஸ் சிலி அணியை முன்னிலைக்கு கொண்டு சென்றார்.

**இந்திய அணி அபாரம்...**

எனினும், 39-வது நிமிடத்தில் இந்தியாவின் சுக்வீர் கவுர் கோல் அடித்து அதனை சமன்படுத்தினர். போட்டியின் வெற்றியை முடிவு செய்யும் கடைசி நிமிடங்களில் இந்திய அணி சிறப்பாக விளையாடியது. இந்திய வீராங்கனை கனிகா சிவாச் போட்டியின் 58-வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து வெற்றியை உறுதிப்படுத்தினார்.

**உருகுவேக்கு எதிராக...**

சிலியை 2-1 புள்ளி கணக்கில் வீழ்த்தி இந்திய அணி வெற்றி பெற்றது. அடுத்து உருகுவே அணிக்கு எதிராக நடைபெறவுள்ள போட்டியில் இந்தியா விளையாடும்.

# கோவையில் கனமழை காரணமாக 5 வீடுகள் சேதம்: அமைச்சர் முத்துசாமி

**கோவை, மே 26-**

கோவையில் பெய்துவரும் கனமழை காரணமாக 5 வீடுகள் சேதமடைந்துள்ளதாக அமைச்சர் முத்துசாமி தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு பருவமழை கேரளாவில் வழக்கமாக ஜூன் 1ம் தேதி தொடங்கும் நிலையில் இந்த ஆண்டு 8 நாட்களுக்கு முன்கூட்டிய தொடங்கிவிட்டது. அதேபோல், தமிழகத்திலும் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் நீலகிரி, கன்னியாகுமரி, கோவை, தேனி போன்ற பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், கோவையில் பெய்துவரும் கனமழை காரணமாக 5 வீடுகள் சேதமடைந்துள்ளதாக அமைச்சர் முத்துசாமி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், கோவையில் பெய்துவரும் கனமழையால் இது வரை 5 வீடுகள் சேதமடைந்துள்ளன. 2 பேருக்கு சிறு காயம் ஏற்பட்டுளது. மழை தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார். மழையால் ஏற்பட்ட சேதங்களை அதிகாரிகள் கணக்கெடுத்து வருகின்றனர். இழப்பீடு வழங்குவது குறித்து மாவட்ட கலெக்டர் முடிவெடிப்பார்' என்றார்.

# வடமேற்கு வங்க கடலில் நாளை புதிய புயல் சின்னம் உருவாகிறது

### கோவை - நீலகிரிக்கு கனமழை எச்சரிக்கை

**சென்னை, மே 26-**

வடமேற்கு வங்க கடலில் நாளை புதிய புயல் சின்னம் உருவாகிறது. இதனால் கோவை- நீலகிரி மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு முன்கூட்டியே தொடங்கியிருப்பதை தொடர்ந்து மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் பெய்த மழை காரணமாக காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இந்த 2 மாவட்டங்களுக்கும் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ள நிலையில் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேபோன்று குற்றாலம் சுற்றுவட்டார பகுதிகளிலும் பெய்த பலத்த மழை காரணமாக அருவிகளில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது. பாபநாசம் பகுதிகளில் அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதியில் நீடித்து வந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று முன்தினம் கடந்து மகாராஷ்டிரா மாநிலத்தில் மையம் கொண்டிருப்பதாகவும் புதிதாக காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக இருப்பது பற்றியும் தனியார் வானிலை ஆய்வாளரான டெல்டா ஹேமச்சந்திரன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதியில் நீடித்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் ரத்னகிரி அருகே நேற்று கரையை கடந்து, மகா ராஷ்டிரா மாநிலத்தில் ஒரே இடத்தில் மையம் கொண்டு உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தின் எஞ்சிய பகுதிகளிலும், கர்நாடகாவின் பெரும்பாலான பகுதிகளிலும் தென்மேற்கு பருவமழை தொடங்கக்கூடும். வடமேற்கு வங்ககடலில் மற்றொரு காற்றழுத்த தாழ்வு பகுதி வருகிற 27-ம் தேதி உருவாகக்கூடும். இதன் காரணமாக 31-ம் தேதி வரை மகாராஷ்டிரா, கோவா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழகத்தில் கோவை, நீலகிரி மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழையின் முதல் சுற்று தீவிரமடைந்து மிக கன மழை முதல் அதீத கனமழையை கொடுக்கும்.

குறிப்பாக மும்பை முதல் ரத்னகிரி வரையிலான கொங்கன் கடற்கரை பகுதி களில் அடுத்த 3 நாட்களுக்கு தீவிர மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதியான முல்லை பெரியார், சிறுவாணி, பரம்பிக்குளம் நீர்பிடிப்பு பகுதிகளில் நல்ல மழை பதிவாகும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 26.05.2025 முதல் 01.06.2025 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் குடும்பத்தில் பல புதிய திருப்பங்கள் ஏற்படும். உங்கள் உடன் பிறப்புக்கு இது வரை தடைப்பட்டு வந்த காரியங்கள் கை கூடிவரும். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். மனைவிக்கு எதிர்பாராத விதமாக சொத்துக்களோ, பணவரவோ ஏற்படும். தெய்வ வழிபாடுகள், நேர்த்திக் கடன்கள் நிறைவேற்ற உசிதமான காலம் ஆகும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். அரசுப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பீர்கள்.

பரணி --

இந்த வாரம் குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். பொதுஜனசேவை, வழக்குகள், தொழில் இவற்றில் வெற்றி கிடைக்கும். சிலரின் பிள்ளைகளுக்கு புதிய தொழில், உத்தியோக வாய்ப்புகள் கிடைக்கும். அதன் காரணமாக வீட்டில் மகிழ்ச்சி நிலவும். அரசுப் பணியாளர்கள் அயராது உழைத்து உயர்அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். திடீர்ப் பயணங்களின் போது முன்பதிவுக் குளறுபடிகளால் இடையூறுகள் ஏற்படும். வணிகர்களுக்கு, தர்ணா, கடையடைப்பு போன்ற பிரச்சனைகளால் தொழிலில் தடைகள் ஏற்பட்டு வருமானம் குறையும். நெருங்கிய நண்பர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. பெரியோர்களின் நல்வார்த்தைகள் கேட்டு, நலம் பெறுவீர்கள்.

கார்த்திகை 1 ஆம் பாதம்—

இந்த வாரம் தங்கள் சந்தோஷத் தருணங்களை குடும்பத்தாரோடு கழித்து மகிழ்வீர்கள். அதன் காரணமாக குடும்பத்தில் குதூகலம் நிலவும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் குறைந்த கூட்டத்தொடு நிறைவேறும். கடைசியில் விருந்து, கேளிக்கைகள் என மகிழ்ச்சியின் உச்சிக்குச் செல்வீர்கள்.. நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையைக் காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் தேர்ச்சி உண்டாகும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4- பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் எடுத்த முயற்சிகள் அனைத்திலும் முன்னேற்றம் அடைவீர்கள். எதிர்பார்த்த அளவு போதுமான வருமானங்கள் கிடைக்கும். நல்ல நண்பர்களின் சேர்க்கை ஏற்பட்டு அவர்களால் ஆதாயம் அடைவீர்கள். விருந்தினர்களுடன் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். அரசு ஆதாயங்களால் தொழில் வழியில் முன்னேற்றம் ஏற்படும். கவனக் குறைவினால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரலாம். வெளிநாட்டுப் பயணங்களைத் தள்ளிப் போடுவது நல்லது. பங்குச்சந்தை, யூக வியாபாரம், பேரங்கள் ஆகியவற்றின் மூலமான கணிசமான தொகைகள் கைக்கு வந்து திடீர் மகிழ்ச்சியில் ஆழ்த்தலாம். நீங்கள் ஈடுபடும் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிட்டும்.

ரோகிணி –

இந்த வாரம் சிலர் பழைய கவலைகளையெல்லாம் மறந்து மகிழ்ச்சிக் கடலில் மிதப்பீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்படையும். குடும்பத்தில் குழப்பம் ஏற்படாது இருக்கப் பிறரிடம் கோபத்தைக் காட்டாது அமைதியைக் கடைப்பிடியுங்கள். இக்கட்டான சூழ்நிலைகளில் சகோதரர்கள் கைகொடுப்பர். செலவுகள் அதிகரிக்கும் வகையில் தூரமான, துயரம் மிக்கப் பயணங்கள் தவிர்க்க முடியாததாகும். குடும்பச் சூழலில் சில சிரமங்கள் ஏற்படலாம். சிலருக்கு உடன் பிறப்புக்களிடையே கருத்து வேறுபாடு காரணமாக வாய்த் தகராறுகள் எழலாம். சமையலறையில் பெண்கள் எச்சரிக்கையுடன் செயல்படுவது அவசியம். சொன்ன பேச்சைக் கேட்காத பிள்ளைகளின் செயல்களால் மன உளைச்சல் ஏற்படலாம்.

மிருகசிரீஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் புண்ணிய ஸ்தல யாத்திரைகள் சென்று மகிழ்வீர்கள். சிலருக்கு தேவதூதர்கள், மகான்களின் சந்திப்புக் கிடைத்து மனதில் அமைதி நிலவும். பொதுச்சேவை போன்ற நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். சிலருக்கு வீட்டுச் செலவுகளைக் கூட சமாளிக்க முடியாத நிலை ஏற்படலாம். சிலருக்குக் கடன்கள் வாங்கும் நிலை ஏற்படலாம். உங்கள் உடல் நலனில் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். தாய்வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படலாம். தீய நண்பர்களைவிட்டு ஒதுங்கினால் அவமானங்கள் ஏற்படாது தப்பிக்கலாம். ஓய்வின்றி உழைப்பதின் காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். மது, மாமிசம் அருந்துபவர்களுக்குத் அஜீரணத் தொல்லைகள் எழலாம்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை- 1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசிரீடம்- 3,4 பாதங்கள்

இந்த வாரம் எதிர்பாராத தனவரவுகளால் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். முன்பின் அறியாதவர்கள் கூட உங்களுக்கு உதவ முன் வருவார்கள். மேடைப் பேச்சாளர்களுக்கு அவர்களின் பேச்சு வன்மையால் வருமானம் அதிகரிக்கும். புதிய வியாபாரத் தொடர்புகளால் இலாபம் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டும், பதவி உயர்வின் மூலமாகப் பணப்பயன்களை அடைவீர்கள். புதிய வியாபாரத் தொடர்புகளால் எதிர்பார்ப்புக்கு மேல் இலாபங்கள் குவியும். திட்டமிட்டபடி புதிய விரிவாக்கங்களைச் செய்து முடிப்பீர்கள். அதன் காரணமாக வருவாயும் ஓரளவு அதிகரிக்கும். சிலருக்குக் கௌரவப் பதவிகள் கிடைத்துப் புகழும், பெருமையும் சேரலாம்.

திருவாதிரை ---

இந்த வாரம் பொருளாதாரத்தை பொருத்தவரை அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். அதன் காரணமாக உங்கள் காட்டில் பணமழை சுமாராகக் கொட்டும். மனமகிழ்ச்சி, பகைகளை வெல்லும் திறன் ஆகியவை ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்களையும், கௌரவத்தையும் அடைவீர்கள். சிலருக்கு வரவை விடச் செலவுகள் அதிகரிக்குமாதலால், பிறரிடம் கடன் வாங்கும் சூழல் ஏற்படலாம். தீயோர் தொடர்பால் வீண் பிரச்சனைகள் எழலாம். அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். வியாபாரத்தில் முன்னேற்ற வாய்ப்புக்கள் பிரகாசமாய் இருக்கும். வேலை விஷயமாக அரசிடம் இருந்து எதிர்பார்த்த தகவல்கள் விரைவில் வந்துசேரும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் தைரியமும் தன்னம்பிக்கையும் வெற்றிகளையும், முன்னேற்றங்களையும் வரவேற்கும். காரியங்கள் கை மீறும் போது திட்டங்களில் மாற்றங்களைப் புகுத்தி, தீர்மானங்களை திரும்ப ஆராய்ந்து, கணக்கிட்டு காரியங்களை நிறைவேற்றுங்கள். அதன் காரணமாகத் தொழிலில் இலாபங்கள் அதிகரிக்கும். நிகழ்வுகளின் போக்கிலேயே சென்று அதன் ராகம், தாளம் மாறாமல் உங்கள் குறிக்கோளை எட்டுங்கள். குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. தொழிலில் எதிர்பார்த்த காரியங்கள் வெற்றிகரமாக முடியும்.. புதிய தொழில் தொடர்புகள் ஏற்படலாம். அரசுப் பணிபுரிபவர்களுக்கு உயர் அதிகாரிகளின் உதவியால் பதவி உயர்வுகள் கிடைக்கலாம்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் வீடு, மனை ஆகியவை வாங்கும் யோகம் ஏற்படும். . பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பங்குச்சந்தை விவகாரங்களில் ஆலோசித்து இறங்குவது நல்லது. நெடுந்தூரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. துன்பங்களைத் தீர்க்கிறேன் பேர்வழியே என்று, கொதிக்கும் சட்டியிலிருந்து தப்பிக்க, கொழுந்துவிட்டு எரியும் தீயில் குதித்துவிடாதீர்கள். தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேறும். வீட்டில் மனைவியிடம் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். பக்திக் கதைகள் கேட்டல், சாதுக்களின் தரிசனத்தால் மனம் அமைதி பெறும். தொழில் துறையினருக்கு அரசால் ஆதாயங்கள் ஏற்படும்.

பூசம் --

இந்த வாரம் பக்திக் கதைகள் கேட்டல், சாதுக்களின் தரிசனத்தால் மனம் அமைதி பெறும். காணாமல்போன பொருட்கள் சேதாரமின்றி கைக்கு வந்து சேரும். சிலருக்குக் காரியத் தடைகள் ஏற்படலாம். தொழிலில் எதிர்பார்த்தபடி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். சிலருக்கு நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மிக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், முழுமூச்சுடன் ஈடுபடும் வேலைகளில் புதிய சாதனைகளைப் படைப்பீர்கள். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். பெரியோர்களின் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவும், மாணவர்களுக்கு விளையாட்டு, தொலைக்காட்சி, கை பேசி ஆகியவற்றால் ஏற்படும், கவனச் சிதறல்கள் காரணமாகப் படிப்பில் ஆர்வம் குறையலாம்.

ஆயில்யம் –

இந்த வாரம் பணம் எனும் மழைப் பொழிவு போதுமான அளவு விட்டு விட்டு இருக்கும். அதன் காரணமாக வீடு, மனை ஆகியவை வாங்கும் யோகம் ஏற்படும். உயர்வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும் பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். நல்லோர் சேர்க்கையாலும், பந்துக்கள் வருகையாலும் உற்சாகம் பொங்கும். அரசுப் பணியாளர்களுக்கு நீண்ட நாளாக எதிர்பார்த்த புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேறும். வீட்டில் மனைவியிடம் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். சிலருக்குத் தோல் சம்பந்தமான பிரச்சனைகள் ஏற்பட்டு சரியாகலாம்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் கேளிக்கை, விருந்துகள் எனப் பொழுது மகிழ்ச்சியாகக் கழியும். தூரதேசத்தில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்களால் மனமகிழ்ச்சி ஏற்படும். சோம்பல் காரணமாகச் சுறுசுறுப்பற்ற நிலை ஏற்படும். ஆயினும், எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை ஆன்மிக காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள். வீட்டில் அமைதியை நிலைநாட்ட வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. தேவையற்ற செலவுகளைக் குறைத்துச் சிக்கனமாக இருந்தால், பணமுடைகளைத் தவிர்க்கலாம். மாணவர்கள் ஆழ்ந்து கவனமாகப் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். அதன் காரணமாகக் கல்வியில் தேர்ச்சி உண்டு.

பூரம் –

இந்த வாரம் கணவன், மனைவிக்கு இடையே கோபம் மறைந்து சமாதானமாகி, இணைந்து பேரின்பம் அடைவர். வீட்டில் உறவுகளுக்கு இடையே, எப்போதும் இல்லாத அளவுக்கு ஒற்றுமை ஓங்கும். அளவுக்கு அதிகமாக அன்பு காட்டும் பெண்களின் ஆதரவால் லாபம் ஏற்படும். குழந்தைகளின் சுட்டித்தனம் மற்றும் சேட்டைகளைக் கண்டு மனம் மகிழ்ச்சி அடையும். தயாரிப்புகளைப் பெருக்கும் விதமாக, பணியில் முனைப்பும், புதிய ஆலோசனைகளும் எழும். பிரியமானவர்களின் விருப்பங்கள் நிறைவேற முன்னுரிமை கொடுங்கள். நல்ல முன்னேற்றத்தை அனுபவிக்க, அதிர்ஷ்டத்தையும், சந்தர்ப்பங்களையும் நம்பி இருக்காதீர்கள்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் பணவரவு அதிகரித்தாலும், புதிய உறவுகளுடனான உல்லாசப் பொழுது போக்குகளாலும், விருந்தினர் வருகையாலும் செலவுகளும் அதிகரிக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் வந்து சேரும். பாசம் மிக்க பெண்களால் மனமகிழ்ச்சி ஏற்படும். பயணங்களால் சுகம் ஏற்படும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். தொழிலில் ஏற்படும் முழுமையான ஈடுபாடு காரணமாக தாராளமான பணவரவு இருக்கும். சிலருக்குப் பருவமாற்றம் காரணமாக சளி, தலைவலி, காய்ச்சல் என சிறு உடல் உபாதைகள் ஏற்படலாம். அதன் காரணமாக வைத்தியச் செலவுகள் கூடலாம்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். தாய் மூலமாக நன்மைகள் ஏற்படும். எதிர்பார்த்த இடங்களிலிருந்து பணவரவு கிடைக்கும். உறவுகள் மூலமாகவும் பணவுதவிகள் கிடைக்கலாம். அரசுவகையில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைத்து வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வீட்டில் ஏற்படும் குழப்பங்கள் காரணமாக கோபமும், உணவின் மீதும் வெறுப்பும் ஏற்படலாம். புதிதாகத் தொழிலில் மேற்கொள்ளப்படும் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலமாக வருமான வாய்ப்புகள் பெருகும். புதிய தொழிலாளர் சேர்க்கை காரணமாக தொழிலில் எதிர்பார்ப்புக்கு மேல் உற்பத்தி பெருகும்.

அஸ்தம் –

இந்த வாரம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். திடீர்ப் பயணங்கள் மூலமாக ஆதாயங்கள் ஏற்படும். மனதில் தெய்வ சிந்தனையும், தரும சிந்தனையும் நிலைத்திருக்கும். வீண் மனஸ்தாபங்களைத் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். பழைய கடன்களை அடைத்துவிடுவீர்கள். வார மத்தியில் உங்களுக்குச் சிறப்பான பலன்கள் ஏற்படும். சிலருக்குப் பண விஷயமான சிந்தனைகள் தலைதூக்கும். தேவையற்ற கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்களும் குறையும். தந்தைவழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, அத்தகையோரை விட்டு விலகுவது உத்தமம்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் எந்தக் காரியத்தையும் முழுத் திறமையையும் காட்டித் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை எளிதாக அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களை ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்புத் தன்மையால் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்வர். பயணங்களில் இடையூறுகள் ஏற்படலாம். அரசு சம்பந்தமான வேலைகள் தாமதப்படலாம். தந்தை வகை உறவுகளால் தோல்லைகள் ஏற்படலாம். சிலருக்கு எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும். தொழிலில் புதிய வாய்ப்புக்கள் வரலாம்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் நீங்கள் விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும், ஆடை சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பணவரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகளுக்காக எதிர்பார்க்கப்படும் வங்கிக் கடனுதவிகள் தாமதத்திற்குப் பின்னரே கிடைக்கும். அரசுப் பணியாளர்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். குடும்பத்தாரிடையே ஓரளவே ஒற்றுமை நிலவும். அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. அரசுத் துறையினரால் அச்சம் ஏற்படலாம். திட்டமிடப்பட்ட செயல்களில் பிறரால் தடைகள் ஏற்படலாம். பிறரின் உயர்வு கண்டு ஏற்படும் பொறாமை மற்றும் கோபங்களைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் தேர்ச்சி ஏற்படும்.

சுவாதி –

இந்த வாரம் சுபகாரியங்களுக்காக குறைந்த அளவு உறவுகளோடு வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். விருப்பத்துக்கு இணங்க அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும், எவ்விதத் தடையின்றி வெற்றி பெறும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடிவரும். தங்கள் சேவைகள் மேலதிகாரிகளால் அங்கீகரிக்கப்படும். அத்துடன் நல்ல பாராட்டும் பெறுவீர்கள். வியாபாரம் மற்றும் தொழிலில் புதுப்புது மாற்றங்களால் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நெளிவு சுளிவாக நடக்கும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பொருளாதார நிலை உயர்வால் பணவரவுகள் திருப்திகரமாக இருக்கும். ஆடைகள், அலங்காரப் பொருட்கள் பெற்று உற்சாகமாகத் திகழ்வீர்கள். சிலருக்குப் பிள்ளைப் பேறு ஏற்படலாம். சிலருக்கு அக்னி பயம், திடீர் விபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதால் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. மாணவர்கள் தங்கள் கடின உழைப்பால் கல்வியில் நல்ல தேர்ச்சி அடைவர். பணிபுரியும் பெண்களுக்கு விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் கிடைக்கலாம். உங்களுக்குத் தொழிலில் புதிய கொள்முதல் மூலமாக அதிகமான வருவாய்ப் பெருக்கம் ஏற்படும். அதன் காரணமாகச் சிலருக்குக் கடன் வாங்க நேரலாம். ஞானிகளின் அருளால் நல்லதே நடக்கும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது, நல்ல முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். தெய்வீக கைங்கர்யங்களில் ஆர்வம் ஏற்பட்டு தானதருமங்கள் செய்ய முற்படுவீர்கள். அனைத்துப் பணிகளிலும் மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். தாயாரின் அனுகூலமான வார்த்தைகள் உற்சாகம் அளிக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பணியில் உள்ளவர்கள் மேல்மட்ட அதிகாரிகளை அனுசரித்துச் சென்றால், பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் பிரகாசமாக அமையும்.

அனுஷம் –

இந்த வாரம் தெய்வ தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாய் இருக்கும். சிலருக்குத் தீயோரின் செயல் கண்டு ஒருவித அச்ச உணர்வு ஏற்படும். கல்வியில் குழந்தைகளின் முன்னேற்றம் கண்டு மனதில் எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படும். அவர்கள் வழியே சென்று அவர்களைத் திருத்துவது நல்லது. புதிதாகத் திட்டமிடும் வியாபார முயற்சிகள் வெற்றி அடைந்து, ஆதாயம் தரும். தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால், எதிர்பார்க்கும் பணி உயர்வுகள் எளிதாகக் கிடைக்கும்.

கேட்டை –

இந்த வாரம் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். விரும்பியதெல்லாம் கிடைக்கும். கணவன், மனைவி இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாசமழை பொழிவர். பிள்ளைகளின் முன்னேற்றங்கண்டு பெருமை கொள்வீர்கள். இல்லத்துக்குத் தேவையான நவீன வீட்டு உபயோகப் பொருள்களை வாங்கி அனுபவிப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் உங்கள் உழைப்பின் சிறப்பு பாராட்டுப் பெறுவதோடு, பதவி உயர்வுக்கும் கைகொடுக்கும். வண்டி, வாகனங்களில் அபராதம் கட்டாதிருக்க அனைத்து ஆவணங்களையும் மறவாமல் கையோடு எடுத்துச் செல்லுங்கள். பொருளாதார நிலையை பொறுத்தவரை சீராக இருக்கும். சிலருக்கு ஏற்படும் திடீர் செலவுகளால் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் அனைத்து வசதிகளும் இன்பமும் ஏற்படும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பால் உயர்வு ஏற்படும். அனைவரையும் கவரும் வண்ணம் சிறப்பான ஆடை அணிந்து மிடுக்காக உலாவருவீர்கள். தனவருமானம் அதிகரிப்பதால் அனைத்துக் காரியங்களும் அனுகூலமாய் இருக்கும். அதற்கேற்ப செலவினங்களும் கூடும். தொழிலில் மிகப் பெரிய சாதனைகளைப் புரிவீர்கள். செய்தொழில், வியாபாரம் எதுவானாலும் புதிய திட்டங்கள் தீட்டுவதன் மூலமாக அதிக இலாபங்களை அடைவீர்கள். அரசுப் பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அதிகாரிகளின் கெடுபிடிகளும் அதிகமாகும். பயணங்களை ஒத்திப் போடுவது நல்லது.

பூராடம் –

இந்த வாரம் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெறும். அவசியம். மனைவியின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் இல்லத்தில் இன்பம் பொங்குவதோடு, முன்னேற்றங்களும் தேடிவரும். உத்தியோக முயற்சியில் இருப்பவர்களுக்குப் போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். அரசு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். அதைத் தக்க வைக்கக் கடின உழைப்புத் தேவை. விற்பனைப் பிரதிநிதிகளின் வருமானம் அவர்களின் பேச்சுத் திறனால் அதிகரிக்கும். உங்கள் உடன்பிறப்புக்களின் தீய நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலை உண்டாக்கும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் நீண்டநாட்களாகத் தீட்டிய திட்டங்களின்படி தடைப்பட்ட யாத்திரை செல்லும் நிலை ஏற்படலாம். துவக்கத்தில் புதிய தொடர்புகளால் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தில் உறவுகளிடையே பாசம் அதிகரிக்கும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். உங்களின் அபரிமிதமான அறிவுத் திறனால் கௌரவப் பட்டங்கள், புதிய பதவிகள் ஆகியவை கிடைக்கலாம். அரசு அதிகாரிகளை அனுசரித்துச் சென்றால் தொழில் அல்லது வியாபாரத்தில் ஏற்படும் சிக்கல்களைச் சமாளிக்கலாம். பழைய கடன்களை அடைக்க தக்க சமயத்தில் பணவரவு ஏற்படும். சிலருக்குப் புதிய தொழில் தொடங்க வங்கிக் கடன்களுக்கான முயற்சிகள் வெற்றி பெறும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4- பாதங்கள், திருவோ ணம்- 1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். வீடு வாங்கும் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பலவழிகளிலும் பணவரவுகள் அதிகம் கிடைக்கலாம். தொழிலில் புதிய விரிவாக்க நடவடிக்கைகள் மூலமாக வருமான வாய்ப்புகள் பெருகும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. கூட்டாகத் தொழில் புரியும் வாய்ப்புக்கள் ஏற்படலாம். திரைத்துறையில் இருப்பவர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். இதுநாள் வரையில் இழுபறியாக இருந்த வழக்குகள் பைசலாகும்.

திருவோணம்-

இந்த வாரம் மதிப்பு மிக்கப் பெரியோர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். தங்கள் திறமைக்கு ஏற்றபடி புகழும், கௌரவமும் கூடும். அனைத்து வேலைகளையும் நம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள். உங்கள் அசாத்தியத் திறமையால் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். அரசு வேலைகளுக்கு மனுச் செய்தவர்கள் சாதகமான பதில்களை எதிர்பார்க்கலாம். நண்பர்கள் மற்றும் உறவுகளிடம் தர்க்கம் செய்யாதிருப்பது நல்லது. அடிக்கடி தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள நேரும். வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களைக் கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். சிலருக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். தாய் மூலமாக நன்மைகள் ஏற்படும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் பெண்களுக்கு ஆன்மிகத்தில் ஈடுபாடும், அதன் காரணமாகக் குடும்ப முன்னேற்றமும் ஏற்படும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகளின் சொல் கேட்டு நடந்தால் உன்னத நிலை அடைவர். சிலருக்கு அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். வரவுக்கு மீறிய செலவுகளைக் கட்டுப்படுத்தி சேமிப்பை உயர்த்துவது நல்லது. சிலருக்குப் பணி அல்லது வீடு ஆகிய இடமாற்றங்கள் ஏற்படலாம். பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். எதற்கும் அவசரப்படாதீர்கள். பதறாத காரியம் சிதறாது முடியும் என்பதால், எந்த ஒரு காரியத்தையும் பதட்டமின்றிப் பொறுமையாகச் செய்தால் வெற்றி நிச்சியம். தங்கள் தனித் திறமைக்கு ஏற்ப பெயரும் புகழும் கிடைக்கும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டியது வரும். வாடிக்கையாளர்களைக் கவர புதிய பரிசுத் திட்டங்களை அறிவிப்பீர்கள். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பெண்களின் வாழ்க்கையில் துன்பங்கள் மறைந்து, முன்னேற்றம் ஏற்படும். கற்பனை வளம் பெருகும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். தந்தைவழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம். கூட்டாளிகளால் ஏமாற்றப்படுவதைத் தவிர்க்க மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

சதயம்-

இந்த வாரம் சுபச் செய்திகள் வந்து காதுகளில் தேனைப் பாய்ச்சும். குடும்பத்தில் சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தனலாபம் அதிகரிக்கும். புதிய கொள் முதல்களால் வியாபாரம் பெருகி இலாபம் அதிகரிக்கும். தொட்டது துலங்கும். பொழுது போக்குச் செலவுகள் அதிகமாகும். கடினமாக உழைத்தாலும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காது. சிலருக்குப் புதுத்தெம்பும், உற்சாகமும் கூடும். புதிய கடன்களை அடைக்க, சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்கவேண்டிய நிலை ஏற்படும். பங்குச் சந்தையில் ஆலோசித்து இறங்குவது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் கிடைக்கலாம்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்குத் திருமணத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சிலருக்கு, புத்திர பாக்கியம் ஏற்படும். சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். திட்டமிட்டுப் புதிய விரிவாக்கங்கள் செய்வதினால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். தேவையற்ற அலைச்சல் தரும் பயணங்களால் தேக சுகம் குறையும். கடமை உணர்வுமிக்க அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடைய கடின உழைப்பு தேவைப்படும். நன்கு ஆராய்ந்து பங்குச்சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் ஓரளவு இழப்பைத் தவிர்க்கலாம்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பல வகையான உயரக வாகன வசதி அமையும். கணவன், மனைவி இடையே மிகுந்த ஒற்றுமை ஏற்பட்டு சந்தோஷம் நிலவும். அலங்காரப் பொருட்கள் மற்றும் வாசனை திரவிய வியாபாரங்களில் அதிக இலாபம் காணலாம். அரசுப் பணியாளர்களுக்கு, அதிகாரிகளின் உதவியால் உயர்பதவிகள் கிடைக்கும். மாணவர்கள் கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். வியாபாரிகளுக்கு அவர்கள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். பணியில் முழுக் கவனம் செலுத்துங்கள். ஏனெனில், நீங்கள் உயிரைக் கொடுத்து உழைத்தாலும், மேலதிகாரி அதில் ஏதாவது குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பார். ஆயினும் சகப் பணியாளர்களின் உதவியால் சமாளித்துவிடுவீர்கள்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் உங்கள் கீர்த்தி பெருகும். பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். உங்கள் அசாத்தியத் திறமையால் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். குடும்பத்தாரின் ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றி அவர்களை மகிழ வைப்பீர்கள். நல்லதொரு வாகனம் வாங்க முயற்சிப்பீர்கள். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். புனித காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். பணிபுரிபவர்களுக்கு உதவியாளர்கள் அமைவர். அரசுப் பணிக்கு முயல்பவர்களுக்கு அனுகூலமான காலமாகும். கால்நடைச் செல்வம், பால்வளம் பெருகும். நேர்மையும் கடின உழைப்பும் மட்டுமே வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும்.

ரேவதி-

இந்த வாரம் விருந்துகளாலும், கேளிக்கை நிகழ்ச்சிகளாலும் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். பெண்களால் சந்தோஷம் உண்டாகும். வாகனங்களில் செல்லும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் செல்லவும். நல்ல நண்பர்களுடன் பழகுவது நல்லது. தீயகுணமுள்ள நண்பர்களைத் தவிர்த்தால், உங்கள் மனம் உயர்ந்த எண்ணங்களைக் கொண்டதாக அமையும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே நடத்தி முடிப்பீர்கள். அரசு வேலையில் அதிகாரம் பண்ணும் தலைப்பதவி கிடைக்கும். வழக்கு விவகாரங்களை ஒத்திப் போடுவது நல்லது. சிலருக்கு விஐபி களின் நட்பு கிடைக்கும். அவர்கள் மூலமாக ஆதாயங்கள் ஏற்படும்.



புதுக்கோட்டையில் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கத்தில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு உள்விளையாட்டரங்கத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மாணவிகளுடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், எம்.எம்.அப்துல்லா எம்.பி., வை.முத்துராஜா எம்.எல்.ஏ, கூடுதல் தலைமைச்செயலாளர் அதுல்ய மிஸ்ரா, கூடுதல் தலைமைச்செயலாளர் பிரதீப்யாதவ், கூடுதல் செயலாளர் ஆர்.வி.ஷஜீவனா உள்ளனர்.

# மாநிலத்தின் உரிமைகளை...(1-ம் பக்க தொடர்ச்சி)

இத்தகைய பேரணியை நடத்தவில்லை என்றும், தி.மு.க. அரசு ஏன் நடத்துகிறது என்றும் உள்நோக்கத்துடன் வைக்கப்பட்ட விமர்சனங்களைப் புறந்தள்ளி, கூட்டணிக் கட்சியினர் பங்கேற்புடனும், முன்னாள் படைவீரர்கள், பல்வேறு அமைப்பினர், பொதுமக்கள் பங்கேற்புடனும் அந்தப் பேரணி வெற்றிகரமாக நடந்து நம் ஒற்றுமையை வெளிப்படுத்தியது. இந்தியாவில் தீவிர வாதத்திற்கு இடமில்லை என்பதை வெளிநாடுகளில் வலியுறுத்தும் குழுக்களில், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்றுள்ள இந்திய குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்று, தன் பங்களிப்பை சிறப்பாக செய்து வருகிறார் கழகத்தின் பாராளுமன்ற குழு தலைவரும் கழகத் துணை பொதுச் செயலாளருமான தங்கை கனிமொழி எம்.பி.

### எதிர்கால வளர்ச்சி குறித்த

அரசியல் நிலைப்பாடு என்பது வேறு. அரசுடன் நாட்டின் நலன் கருதி ஒத்துழைப்பது என்பது வேறு. அந்த வகையில்தான், பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற இந்தியாவின் எதிர்கால வளர்ச்சி குறித்த மாநில முதல்வர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று, தமிழ் நாட்டின் நிலையைத் தெரிவித்ததுடன், பிரதமரிடம் தமிழ் நாட்டிற்கான திட்டங்களையும், நிலுவையில் உள்ளவற்றையும் நேரடியாகவே வலியுறுத்தினேன். நாட்டின் நலனை எப்படி தி.மு.க. விட்டுக்கொடுக்காதோ, அதுபோல மாநில உரிமைகளையும் ஒருபோதும் விட்டுக்கொடுக்காது.

### துணிவுடன் எதிர்கொண்டு

மிரட்டலுக்கு அடிபணிந்து கட்சியை அடமானம் வைக்கும் வழக்கம் நம்மை விமர்சனம் செய்பவர்களின் தனிப்பட்ட உரிமையாக இருக்கிறது. நமக்கோ, மாநில உரிமையே முதன்மையானதாக உள்ளது. அதில் எவ்வித சமரசமுமின்றி, நீதிமன்றத்தில் சட்டப் போராட்டத்தை நடத்தி வெற்றி கண்டு வருகிறோம். அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, சி.பி.ஐ. போன்றவை தி.மு.க.வினரைக் குறிவைத்ததுபோல இந்தியாவில் வேறு எந்தக் கட்சியையும் குறிவைத்ததில்லை. அவற்றைத் துணிவுடன் எதிர்கொண்டு சட்டரீதியான போராட்டத்தின் மூலம்தான் வென்று வருகிறோமே தவிர, எதிர்க்கட்சியைப் போல அடிமை சாசனம் எழுதிக் கொடுத்ததில்லை. அதுவும் அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த டாஸ்மாக் முறைகேடுகள் தொடர்பான எஃப்ஐஆர்-கள் சம்பந்தமாக அமலாக்கத் துறை நடத்திய ரெய்டுக்குத் தி.மு.க ஏன் சமரசம் செய்ய வேண்டும்? அமலாக்கத்துறையின் நடவடிக்கைகள் சட்டமீறலானவை என்பதை சுப்ரீம் கோர்ட் கருத்துகள் மூலம் உறுதி செய்திருக்கும் அரசுதான் திராவிட மாடல் அரசு.

### சந்திக்க ஆவலாக உள்ளேன்

எத்தனை முறை விளக்கமளித்தாலும் எதிரிகள் பழைய மாவையே புளிக்கப் புளிக்க அரைத்துக் கொண்டிருப்பார்கள். திருந்தவோ, வருந்தவோ மாட்டார்கள். தமிழ்நாட்டு மக்கள் அவர்களை விரும்பவும் மாட்டார்கள். 2026-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் திராவிட மாடல் ஆட்சியே தொடரும் என்ற உறுதியை மக்கள் எடுத்துள்ளனர். அவர்களுக்கான பணியை மேற்கொள்வதே நம் கடமை. தேர்தல் களமும் மக்கள் பணியும் இணைந்துள்ள நிலையில், உடன்பிறப்புகளான உங்களை ஜூன் 1 அன்று மதுரையில் நடைபெறும் கழகப் பொதுக்குழுவில் சந்திக்க ஆவலாக உள்ளேன். உங்களால் நான் கழகத் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, தலைநகர் சென்னைக்கு வெளியே நடைபெறுகின்ற முதல் பொதுக்குழு. தமிழ் வளர்த்த நகரமாம் மதுரையில் பொதுக்குழுவை நடத்துவதற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மூர்த்தி அனுமதி பெற்று, அதற்கான ஏற்பாடுகளை அவருக்கேயுரிய முறையில் சிறப்பாக மேற்கொண்டு வருவதை நாள்தோறும் கேட்டறிந்து வருகிறேன்.

### உடன்பிறப்புகளை....

திராவிடத்தின் அடுத்த தலைமுறை பாய்ச்சலுக்கும், தேர்தல் களத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கும், ஆர்த்தெழும் இயக்கமான தி.மு.க. எவருக்கும் எப்போதும் அடிபணிவதில்லை என்பதை உணர்த்தி, எதிரிகளின் எதிர்பார்ப்பைத் தவிடுபொடியாக்கும் நம் கழகத்தின் நிலைப்பாட்டை உரக்க வெளிப்படுத்தவும் கூடல் நகரில் பொதுக்குழு கூடுகிறது. உடன்பிறப்புகளை எதிர்நோக்கி மதுரை பொதுக்குழுவுக்கு உங்களில் ஒருவனான நான் ரெடியாகிவிட்டேன். நீங்களும்தானே?'' என தெரிவித்துள்ளார்.

# 2026 சட்டமன்ற தேர்தலில் வென்று மீண்டும் ஆட்சி பொறுப்புக்கு வர துணை நிற்போம்

## தி.மு.க. இளைஞரணி கூட்டத்தில் தீர்மானம்




திருச்சி, மே 26-

திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணியின் ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தி.மு.க. இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நேற்று திருச்சியில் நடைபெற்றது. தி.மு.க. இளைஞர் அணியின் செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

இதில் மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் தீர்மானங்கள் வருமாறு:

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் இறந்த அப்பாவி மக்களுக்கும், ஆபரேஷன் சிந்தூரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களுக்கும், ஆழ்ந்த இரங்கல் மற்றும் அஞ்சலி. பயங்கரவாதத்திற்கு எதிரான இந்திய ராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு பாராட்டு.

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க, ஆளுநருக்கும் குடியரசுத் தலைவருக்கும் காலவரம்பை நிர்ணயம் செய்ததுடன், ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டிய 10 மசோதாக்களுக்கும், ஒப்புதல் வழங்கிய சுப்ரீம் கோர்ட்டிற்கு நன்றி.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்ப்பைப் பெற்றுத் தந்த தி.மு.க. தலைவர், முதல்வர் ஸ்டாலினுக்கு பாராட்டும், நன்றியும்.

சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பையே கேள்விக்குறியாக்கும் விதமாக குறுக்கு வழியை நாடும், கூட்டாட்சித் தத்துவத்துக்கு விரோதமான சக்திகளுக்கும் கண்டம்.

'மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிதியை வழங்குவோம்' என்ற ஒன்றிய அரசின் அடாவடிப் போக்கிற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடுத்திருக்கும் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினுக்கு பாராட்டு.

இந்திய ஒன்றியத்திலேயே 'நம்பர்-1' மாநிலமாக தமிழ்நாட்டைக் கட்டமைத்து வரும் திராவிட மாடல் முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி. பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் அதி.மு.க. முன்னாள் நிர்வாகி உட்பட 9 பாலியல் குற்றவாளிகளுக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருப்பதற்கு வரவேற்பு.

தமிழர்களுக்கு என்று தொன்மையும் சிறப்பும் வாய்ந்த ஒரு நாகரிகமும், வரலாறும் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல், தமிழ்நாட்டின் வரலாற்றை மறைக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு 2026-சட்டமன்றத் தேர்தலில் வென்று, மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வர செயலாளர் தலைமையிலான இளைஞர் அணி எல்லா வகையிலும் துணை நிற்கும் என்று இந்தக் கூட்டத்தில் உறுதி ஏற்கப்பட்டது.

## கடந்த 3 ஆண்டுகளாக புறக்கணித்த நிலையில்

# நிதி ஆயோக் கூட்டத்தில் தற்போது பங்கேற்றது ஏன்?

## முதல்வருக்கு எடப்பாடி பழனிசாமி கேள்வி



கோவை, மே 26-

கடந்த 3 ஆண்டுகளாக நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணித்த முதல்வர் ஸ்டாலின் தற்போது பங்கேற்றது ஏன்? அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ். கேள்வி எழுப்பியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு இ.பி.எஸ்., அளித்த பேட்டி: 3 ஆண்டுகளாக நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணித்த முதல்வர் ஸ்டாலின் தற்போது பங்கேற்றது ஏன்? பிரதமர் மோடி தலைமையில் 3 ஆண்டுகளாக நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில் ஏன் பங்கேற்கவில்லை? மக்கள் பிரச்னைகளுக்கு செல்லாமல் இப்போது ஏன் சென்றார்?.

மக்கள் நலனின் அக்கறை இருந்திருந்தால் மூன்று ஆண்டுகள் நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணிக்காமல் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று இருப்பார். எதிர்க்கட்சியாக இருந்தபோது கருப்புக் கொடி காட்டிய தி.மு.க., இப்போது வெள்ளைக் கொடி காட்டுகிறது? பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் பாதுகாப்பு இல்லை என நான் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறேன்.

ஆனால் இதுவரை தரமான பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

இவ்வாறு இ.பி.எஸ். கூறினார்.

# கேரள கடற்பரப்பில் முழுவதும் மூழ்கியது சரக்கு கப்பல்

## 24 பணியாளர்கள் உயிருடன் மீட்பு



திருவனந்தபுரம், மே 26-

கேரளக் கடற்பரப்பில் அபாயகரமான சரக்குகளுடன் சென்ற லைபீரிய கொள்கலன் கப்பல் முழுவதும் மூழ்கியது. அதில் இருந்த 24 பணியாளர்களையும் உயிருடன் இந்தியக் கடற்படையுடன் இணைந்து இந்தியக் கடலோரக் காவல்படை மீட்டது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "லைபீரியக் கொள்கலன் கப்பல் எம்.எஸ்.சி. எல்சா 3 கொச்சி கடற்கரையில் மூழ்கியது. அதில் இருந்த 24 பணியாளர்களும் மீட்கப்பட்டனர்.

21 பேரை இந்தியக் கடலோரக் காவல்படையும் மூன்று பேரை இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். சுஜாதாவும் மீட்டன. எம்.எஸ்.சி. எல்சா 3 கப்பல் 640 கொள்கலன்களுடன் மூழ்கியது.

அவற்றில் 13 ஆபத்தான சரக்குக் கொள்கலன்களும் 12 கால்சியம் கார்பைடு கொள்கலன்களும் இருந்தன.

மே 24 அன்று, விழிஞத்திலிருந்து கொச்சிக்குச் செல்லும் வழியில் எம்.எஸ்.சி. எல்சா 3 என்ற கப்பல் மூழ்கத் தொடங்கி இருந்தது.

உலகளாவிய தேடல் மற்றும் மீட்பு நெறிமுறைகளின்படி, இந்தியக் கடலோரக் காவல்படை ரோந்து கப்பல்கள் மற்றும் வணிகக் கப்பல்களான எம்.வி. ஹான் யி மற்றும் எம்.எஸ்.சி. சில்வர் 2 ஆகியவையும் உதவிக்காகத் திருப்பிவிடப்பட்டன.

மாலை நேரப் பிற்பகுதியில், ரஷ்யா, உக்ரைன், ஜார்ஜியா, பிலிப்பைன்ஸ் நாட்டவர் உட்பட 24 பணியாளர்களில் 21 பேர் மீட்கப்பட்டனர்.

மீட்பு ஏற்பாடுகளுக்கு உதவ மூன்று மூத்தப் பணியாளர்கள் கப்பலில் இருந்தனர்.

இருப்பினும், கப்பலின் நிலை இரவு முழுவதும் மோசமடைந்து, மே 25, 2025 அன்று அது கவிழ்ந்தது. மூன்று பணியாளர்களும் கப்பலை கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மேலும் ஐ.என்.எஸ். சுஜாதா அவர்களை மீட்டது. இந்த விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 4 மாவட்டங்களுக்கு இன்று...(1-ம் பக்க தொடர்ச்சி)

மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மிக லேசான மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக அவலாஞ்சி (நீலகிரி) 210 மி.மீ, சின்னக்கல்லார் (கோயம்புத்தூர்) 140 மி.மீ, வால்பாறை பி.டி.ஓ. (கோயம்புத்தூர்) 100 மி.மீ, சின்கோனா (கோயம்புத்தூர்), எமரால்டு (நீலகிரி), தாலுகா அலுவலகம் பந்தலூர் (நீலகிரி), விண்ட் வொர்த் எஸ்டேட் (நீலகிரி), தேவாலா (நீலகிரி) தலா 90 மி.மீ, மேல் பவானி (நீலகிரி), சிறுவாணி அடிவாரம் (கோயம்புத்தூர்), சோலையார் (கோயம்புத்தூர்), கூடலூர் பஜார் (நீலகிரி), மேல் கூடலூர் (நீலகிரி), கீழ்கோத்தகிரி எஸ்டேட் (நீலகிரி) தலா 70 மி.மீ, செருமுள்ளி (நீலகிரி), வூட் பிரையர் எஸ்டேட் (நீலகிரி), பார்வூட் (நீலகிரி) தலா 60 மி.மீ மழைப் பதிவாகியுள்ளது.

இதனிடையே நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி, தேனி ஆகிய 4 மாவட்டங்களுக்கு இன்று (26-ம் தேதி) மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் திருப்பூர், திண்டுக்கல்லில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று (26-05-2025): வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35-36 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கண்காணிப்பு அலுவலர் லலிதா, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, கூடுதல் ஆட்சியர் கௌசிக், மாவட்ட வன அலுவலர் கௌதம், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.